உ

சிவமயம்.

திருவெண்காடரென்னும்

# பட்டினத்தடிகள்

ஒரு தமிழ் நாடகம்

(இன்னிசைப் பாடல்களமைந்தது.)

761/4·19

இது

சி. மு. கங்காதர சிவா அவர்கள்

இயற்றியது.

"மாசற்ற கொள்கை மனத்தி லடைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு"—ஔவையார் குறள்.

சென்னை

வேவர்லி அச்சியந்திர சாலையில்

பதிப்பித்தது.

1919.

அணு 8.] [தபாற் செ... று.

(Rights Reserved.)

1233

0-2M158,P
N19
148069

25 NOV 1919
MADRAS

சிவமயம்.

திருவெண்காடரென்னும்

# பட்டினத்தடிகள்

ஒரு தமிழ் நாடகம்

(இன்னிசைப் பாடல்களமைந்தது.)

761
4.19

இது

சி. மூ. கங்காதர சிவா அவர்கள்

இயற்றியது.

“மாசற்ற கொள்கை மனத்தி லடைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு” — ஔவையார் குறள்.

சென்னை

வேவர்லி அச்சியந்திர சாலையில்

பதிப்பித்தது.

1919.

விலை அணா 8.] [தபாற் செலவு வேறு.

*(Rights Reserved.)*

861

894.812

168069

-600 008

2MK58,P

N49

உ

கணபதி துணை.



திருவெண்காடரென்னும்

# பட்டினத்தடிகள்.

காப்பு

சீர்மேவும் ஐங்கரனே செஞ்சடை யோன் றன்மகனே
பேர்மேவுந் துங்கப்பெருமானே—ஏர்மேவும்
பட்டினத்தார் தன்சரிதம் பாடுவதற் குன்னருளை
இட்டமுட னீவா யிசைந்து.

---

வினாயகஸ்துதி.

நாட்டை—ஆதி.

பல்லவி.

மூலா மறைமுதல் நடமிடும் மேலா
மும்மதகஜமுக சீலா
மூஷிகவாகன கோலா கிருபை செய்குவாய் (மூலா)

அநுபல்லவி.

சீலர் சிவஞானியரிதமுறும்
சித நாத சதுர்வேத அதீத (மூலா)

சரணம்.

நீலகண்டரிதய நேய சிகாமணி
நித்திய நின்மல நிட்களமாமணி
யேலவார் குழளாளுமை கண்மணி
இனித புனித குண கனதன நவமணி
இரக்கமேவு மிகபரசுகமெய்ப்பொருள்
சிறக்கும் ஓம் பிரணவ ஐய கணபதியருள். (மூலா)

---

சரஸ்வதிஸ்துதி.

(நௌரிஞ்சிராகு என்ற வண்ணம்.)

பல்லவி.

கலாவதி சரஸ்வதி கமலதள
உலாசமயசோதி பாரதி (கலாவதி)

அநுபல்லவி.

கலாப அணி வேணி சதுர்முகனுர்
காந்தாமணி கனக பூஷணி (கலாவதி)

சரணம்.

நலமே நாவிலுரையணி
நான்மறையிலுறை நாயகியே நனி
தலமேபுகழோங்க கிருபைசெய்
தாயே கல்யாணி வாணி (கலாவதி)

---

விஷ்ணுஸ்துதி.

அடாணு—ரூபகம்.

பல்லவி.

இரகுபதி கிருபாநிதி
இராமசந்த்ரபூபதி

25 NOV 1919
MADRAS

அநுபல்லவி.

சகலஜீவ சுகாதார
சற்குண, நிற்குண கருணா
சற்ஜன ரிதசரணா ஸ்ரீ (இரா)

சரணம்.

சங்குசக்ர துங்கபாணி
சதுரா சாரங்கபாணி
பங்கஜ விலாச வேணி
பதியே பதங்கதியே
இதுதநியே கிருபை பதியே ஸ்ரீ (இரா)

---

சிவஸ்துதி.

ஸாம்பஸதாஸிவ ஸாம்பஸதாஸிவ
ஸாம்பஸதாஸிவ ஸாம்பஸிவா,

1. அற்புதவிக்ரஹ அமராதீஸ்வா
அகணிதகுணகண அமிர்த ஸிவா. (ஸாம்பஸதாஸிவ)

2. ஆனந்தாம்ருத ஆஸ்ரிதரக்ஷக
ஆத்மாநந்த மஹேஸ ஸிவா. (ஸாம்பஸதாஸிவ)

3. இந்துகளாதர இந்த்ராதிப்ரிய
ஸுந்தரரூப ஸுரேஸ ஸிவா. (ஸாம்பஸதாஸிவ)

4. ஈஸஸுரேஸ மஹேஸஜனப்ரிய.
கேஸவஸேவித கீர்த்தி ஸிவா. (ஸாம்பஸதாஸிவ)

5. உரகாதிப்ரிய பூஷணஸங்கர
நரகவிநாஸ நடேஸ ஸிவா. (ஸாம்பஸதாஸிவ)

---

அங்கம் I — காட்சி I.

இடம் :—காவிரிப்பூம்பட்டினம்.
காலம் :—திருவமர்வேளை
நடர் :—திருவெண்காடர், சிவகலை, சிதம்பரம் செட்டியார்,
நடனப்பெண்கள் முதலியோர்.

[வசந்தமண்டபம். திருவெண்காடர் மனைவியுடன் மணக்கோலத்தோடு வீற்றிருக்கின்றார். நடனப்பெண்கள் நடிக்கின்றார்கள்.]

நடனமாதர்.

அம்ஸத்வனி—ஆதி.

பல்லவி.

மாமகிழ்தரும், பார்புகழ்பெறும்
மாமணசதுரிதே—மாட்சிபெரும் (மா)

அநுபல்லவி.

மலரிலொளிமிகும்; மங்கைபெணவேதகும் (மா)

சரணம்.

வான்நிகழ்மதியம் போல் வதனமுள
ஆரிழைக்குகந்த ஆளர்

யார்நிகர்சொல்லவும் நேரிலையழகு
வார் மலைமானுயர் தோளர்

அமை வதரி தரிது
அவனி தனிற் பெரிது

ஆகுமே வுயர் போகமாஞ் சுபம்
பாகுநேர் மொழி தோகையா டபம் (மா)

சிதம்பரம்செட்டியார் :—(புன்னகையோடு) மெல்லியர்காள்! உங்கள் நல்லிசைப் பாடல் ஆடல்களால் எல்லையில்லா ஆநந்தங் கொண்டோம். இனியெல்லாம் வல்லயிறைவனைப்புகழ்ந்து நல்ல ஓர் கீதம் பாடுங்கள்.

நடனமாதர் :—சித்தப்படியே.

(பாடுகின்றார்கள்.)

கேஸல்—ஆதி

பல்லவி.

சிவசம்போ மாதேவா (சிவ)

அநுபல்லவி.

சரணம், தருணம், சகலபுகழருளும் சிவ)

சரணம்.

தவசாம்பிராஜ்ய சுகபரனே
தலமுயர் வைசியகுலமிக
நலமுடன்நிதிபலன் பெருகவே
தாரும், கோரும்
சீரும், பேறும்
தரைபுகழ்ந்திட திருவருள் செய்யும்
பரைமகிழ் பராபரனே அரனே
பாடினோம் ஆடினோம், நாடினோம் தேடினோம்
நாம், நாம், நாம். (சிவ)

சபையோர்:—பேஷ்! பேஷ்!! (எல்லோரும் கரதாளமிட்டு நகைத்துப்புகழ்கின்றார்கள்.)

சபை கலைகின்றது.

---

அங்கம் I. காட்சி II.

இடம் :—திருவிடைமருதூர்
காலம் :—நண்பகல்
நடர் :—சிவசருமர், சுசீலே, ஆண்டார்,

[சிவசருமர் ஸ்ரீ மஹாலிங்கேஸ்வாருக்கு நைவேத்தியங் கொண்டு போயிருக்குந்தருணம் ஆண்டான், அடியார் கூட்டத்துடன் சுசீலே அம்மையாரிட மணுகுகிறார்]

ஆண்டான்:—

வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
றாழாதறஞ் செய்மின்றடங் கண்ணன் மலரோனுங்
கீழ்மேலுற நின்றான்றிருக் கேதார மெனீரே.

ஆண்டான் :—சுயஞ்சோதி, பரஞ்சோதி, பரிபூரணம் சாந்தமூர்த்தி! நாம் இங்கு நாடிவந்தவிடயம், உங்களனைவர்களுக்கும் நன்கு தெரியுமல்லவா?

பரஞ்சோதி :—ஆம், சுவாமி.

ஆண்டான் :—சிவசருமன் தற்போது ஸ்ரீமகாலிங்கருக்கு நைவேத்தியங் கொண்டுபோயிருக்கிறான் என்பது நன்கு தெரிகின்றது. ஆகவே நாமிங்கு சற்றுநிதானித்துச் செல்வதே உசிதமென்று நினைக்கிறேன்.

சாந்தமூர்த்தி :—திருவுளச் சம்மத மெப்படியோ? அப்படியே செய்யுங்கள்.

ஆண்டான் :—பரிபூரணம்! சிறிது தேவாரப்பாராயணஞ்செய்,

பரிபூரணம் :—சித்தப்படியே, (தேவாரம் பாடுகிறார்)

ஆண்டான் :—பூரணம், போதும் நிறுத்தட்டும். அனைவரும் எழுந்திருங்கள். சிவசருமன் சன்னிதானத்தினின்று திரும்பிவிட்டான். இனி தாமதிக்கப்படாது. அவன் இல்லமணுகுவதற்கு முன்னம் அவ்விடம்போய் இருக்கவேண்டும்.

(அனைவரும் போகின்றார்கள்)

பிக்ஷான்தேஹி (சுசீலையை நோக்கி) தாயே! எங்கள் பசியைத் தணிக்கத் தங்களாலாகுமா?

சுசீலை:—(நமஸ்காரத்துடன் அனைவரையும் உபசரித்து) சிவசரணர்களே! ஆகும். எமதையர் அமுதுண்ண வருந்தருணமாயிற்று. அகமகிழ்ந் தமருங்கள்.

ஆண்டான்:—(உரத்த சப்தத்துடன்) அந்தோ! பசியின் கொடுமையை யென்னவென்று சொல்வேன். பிராணன் துடிக்கிறதே. என்னசெய்வேன். என்னசெய்வேன்.

சுசீலை:—(வாட்டத்துடன்) சுவாமிகாள்! வருந்தாதீர்கள். இன்னுஞ் சில நிமிடத்திற்குள் ஐயர் வந்து விடுவார்.

ஆண்டான்:—சிவ சிவா! சிவ சிவா!! (சோகமுறுகிறார்.)

[சிவசருமர் மனைவியாலுணர்ந்து அடியாருக் கன்னமளிக்க வழைக்கிறார்.]

சிவசருமர்:—சுவாமின்! அன்னமருந்த வாருங்கள்.

ஆண்டான்:—அடடா என்ன! நான் வரவேண்டுமா? என்னால் முடியவே முடியாது. பிராணன் போகிறது. பிராணன் போகிறது. அந்தோ! அங்கே யிங்கேயென்று அலட்டுதற்கா இங்கு உட்காரும்படிச் சொன்னது. அன்றே! முன்னமே சொல்லியிருந்தால் இன்னுமெங்கேனும்போய் இளைப்பாற்றிக்கொள்வேனே. (சோர்வடைகிறார்)

சிவசருமர்:—(பயபக்தியுடன்) ஐயனே! மன்னிக்க வேண்டும். இதோ கொண்டுவருகிறேன். (விரைந்தோடி அமுதினைக் கொணர்ந்து) சுவாமின்! கிருபைகூர்ந்து அமுதுண்ண வேண்டும்.

[சிவசருமர் கொண்டுவந்த அமுதனைத்தும் ஆண்டானொருவரே புசித்து விடவும் சிவசருமர் மற்றவடியார்களுக்கென்செய்வது என்று மனக்கலக்க மடைகிறார்.]

சிவசருமர்:—அன்னமே! மற்ற அடியார்களுக் கென்ன செய்வதோ? (சோர்வடைகிறார்)

சுசீலை:—நாதா! (வணக்கத்துடன்) எதற்காக சோர்வடைய வேண்டும். கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கழுவது போலாகும்.

முகாரி—சாப்பு.

பல்லவி.

சிறந்தகுணபதியே—இதற்காக
சிந்திக்கலாமோ நிதியே (சிற)

அநுபல்லவி.

துறந்தவர் செய்கையைத் தெரிந்தவர்தாமோ
வருந்தியே மனதோடு தளர்ந்திடலாமோ (சிற)

சரணம்.

கறந்த பால் வெண்ணெயும் நெய்கலந்தாப்போல்
நிரந்தர மொன்றெனும் நிலைவிடலாமோ
மறைதுயா புகழ் அறநேயா
மாதவர் சோதனை மயங்கிடலாமோ (சிற)

தவத்திற் சிறந்த மகான்கள் இதுபோலும் பலசோதனைகள் செய்வார்களென்று நன்கு தெரிந்த தாங்கள் இவ்விதம் மயங்கி கலங்குதல் நன்றோ! இதோ தமது கையினுற் கட்டியசெய்ய மாங்கல்ய மிருக்கிறது. ஐயாவிற்று அணைத்துங்கொண்டு வாருங்கள். மெய்யடியார்களுக்கு அன்னமளித்து துய்ய பயனடையலாம். வையகத்தார் வசைகூறுவார்களென்று யோசிக்கவேண்டாம். கற்பனையும், சொப்பனமுமான அற்பப்புகழிது வாகும். "வெண்டிருநீறு புனையுமா தவர்க்கு விருந்துசெய் துறும்பெரு மிடியுங், கொண்டநல் விரதத் திளைக்கும் யாக்கையுமிக், கொடியனேற் கருளுநா ளுளதோ" வென்று முன்னோர்கள் வரைந்திருக்கும் வாசகத்தை யுன்னில் சிவனடியார்களுக் கன்னமளிக்கும் பலன் சிறந்ததென்றும், அவர்களுக் கன்னமளித்து அதனால் தாரித்திரமடையப் பெறுவது அதனினுஞ் சிறந்த தென்றும் செவ்வனே விளங்குகின்றது. ஆகவே கீர்த்தி யபகீர்த்தி யென்பதை சிந்திக்காது இஷ்ட பூர்த்தி செய்யுங்கள்.

(மாங்கல்யத்தை சிவசருமரிடந் தருகிறாள்.)

சிவசருமர்:—அன்பே! உயிரே! அழகே! இல்லாளகத்திருக்க வில்லாததொன்றில்லையென்ற நல்வாக்கியஞ் சொல்லளவாயிருந்த உண்மை பிரத்தியட்சமாய் உன்னளவில் இன்று உணர்ந்தேன். நீ சொன்னவாறே செய்யவிசைந்தேன். இதோ விரைவாகச் சென்று சகலமுங்கொண்டு வருகிறேன். அடியார்களுக்கு நல்ல வார்த்தைகள் சொல்லிக்கொண்டிரு. (சிவசருமர் மாங்கில்யத்தைப் பெற்றுக்கொண்டு விரைந்து செல்கிறார்.)

---

## அங்கம் 1. காட்சி III.

இடம் :—திருவிடைமருதூர். (சயனக்கிருஹம்.)
காலம் :—நள்ளிருள்.
நடர் :—சிவசருமர், சுசீலை.

(சிவசருமர் கனவுகண்டு திடுங்கிட்டெழுந்து)

தந்யாசி—ஆதி.

பல்லவி.

சிவமே செயலறியேன் என்னை
சோதிப்பதேன் தெரியேன். (சிவ)

அநுபல்லவி.

நவமே கனவினில் நான் கண்டது மின்று
பவமே பறந்தது கதிர்முன் பனிபோல் நின்று (சிவ)

சரணம்.

புகலுறு நால்வகை பேதமாயிலங்கும்
சகல சராசர சாட்சியாய் விளங்கும். (சிவ)

ஹர! ஹர! சம்போ! நின் திருக்கருணைப் பெருக்கத்தையென்னென்று சொல்லுவேன். இறைவா! தமது திருவடிக் கமலங்களைக் காண்பதற்கு ஹரி பிரமாதியர் வருந்தினர்களென்றால் யான் எம்மாத்திரம். என்பொருட்டு தாம் வைத்தப் பெருங்கருணைத் திறத்தினை எண்ணுந்தோறும் என்தேகம் புளகிக்கின்றதே. ஆரமுதே! எனது வறுமைப் பிணியை அகற்றுவதற்காக அருள்நோக்கம் வைத்ததென்

றுணர்ந்தேன். ஆனால் தேவரீர் விண்ணப்பித்த வண்ணம் வேறொருவருக்குத் தம்மை விற்க எப்படித் துணிவேன் அந்தோ!

மால்கோஸ்—ரூபகம்.

கண்ணிகள்.

எவ்விதமும்மை விற்றிட என்மனந் துணிவேனையா
செவ்விய திருவுடையாய் செய்பிழை பொருத்தாளையா (எவ்)

இவ்விதம் விளையுமென்று எண்ணிலேனுளமே மெய்யா
திவ்விய தேசோன்மயா, திருவருள் செய்யுந்துய்யா (எவ்)

இம்மையிலழியுஞ் செல்வம் ஈந்திடி லெனக்கேனையா
தம்மை நிமையுமகலாத் தன்மையே கிருபை செய்யையா. (எவ்)

"நீர் மேற் குமிழ் நிறை செல்வம், நீரிலெழுத்தாகு மாக்கை" என்றதை எண்ணுமற் போனேனே! அண்டர் கோனே! எனக்குச் செல்வம் வேண்டாம். இந்த வறுமையோடே என் தேகத்தை யொழிப்பேன். தம்மை விற்றுப் பெருஞ் செல்வத்தையடைய சம்மதிக்க மாட்டேன். கருணைக் கடலே! கண்ணுதற்பொருளே! அருளொளிஞான அமுதவாரிதியே! சிவனே யான் பலயோனிகள் தோறும் பிறந்து, இறந்து, துன்பப்படாமலும், ஐம்புலன் வழிச்சென்று வருந்தாமலும், நரகவாதையிற் சிக்கித் தவியாமலும், கிருபைவைத்து அடியேனென்றும் தம்முடனே யுறையும்படி திருவருள் பாலிக்க வேண்டும் தயாநிதி.

சிவபெருமான் :—(அசரீரியாக) ஹே அன்ப! வருந்தற்க. உனது எண்ண முற்றினு யாமறிவோம். ஆனால் யாம் விண்ணப்பித்தபடியே காவிரிப்பூம்பட்டினத்தில் வசிக்கும் வைசிய குலதிலகனுகிய திருவெண்காடனுக்கே எம்மை விற்று எம் நிறையளவு பொன் பெற்று புகழுற்று வாழுங்கள். இதுவே எமது கட்டளை. அன்னவனை ஆட்கொள்ளும் பொருட்டே யாம் மகவடிவுகொளத் திருவுளங் கொண்டது. கடையில் உம்மையும் ஆட்கொள்வோம் அஞ்சற்க,

சுசீலை :—(திடுக்கிட்டெழுந்து காதலன் முகவாட்டத்தைக் கண்டு.) நாதா ஏன் வாட்ட முற்றிருக்கின்றீர்? (விண்ணோக்கி) என்ன சோதனையிது!

சிவசருமர் :—பிரியே சோதனையா! மனவேதனை யென்றால் பொருந்தாதோ. ஹூம், ஹூம், ஆம், ஆம். "புண்ணிய வசத்தினாற் செல்வமது வரவேண்டும்."

(மௌனமாயிருக்கிறார்.)

சுசீலை :—பிராணபதி ஏன் மௌனஞ் சாதிக்கின்றீர்கள்? அடியாளுக்குத் தெரிவிக்கவேண்டும்.

சிவசருமர் :—சிவபூஷணமே! சொல்லவும் நாவெழுவில்லையே (சிவத்யானமாக)

ஸ்தோத்திரம்.

அரும்பொனே மணியே யென்னன்பே யெனன்பான
வறிவே யெனறிவிலூறு

மானந்த வெள்ளமே யென்றென்று பாடினே
னாடினே னாடி நாடி

விரும்பியே கூவினே னுலறினே னலறினேன்
மெய்சிலிர்த்திருகை கூப்பி

விண்மாரி யெனவெ விரு கண்மாரி பெய்யவே
வேசற்றயர்ந்தேனியா

னிரும்புநேர் நெஞ்சகக் கள்வனானுலுமனை
யிடைவிட்டு நின்ற துண்டோ

வென்றாநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ
யாதேனு மறியா வெறுர்

தரும்பனே னென்னினுங்கை விடுதனீதியோ
தொண்டரொடு கூட்டு கண்டாய்

சுத்த நிர்க்குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே

திருவே, தேனே, செழும் பாகே, நித்தியமாகிய பேரின்பத்தை நாடாது அநித்தியமாகிய செல்வத்தையேன் சிந்தித்தேன். (மனைவியைப்பார்த்து) அந்தோ! பெண்மணி, இன்றிரவு எனது கனவில் எம்பெருமான் என்ன திருவிளையாடலை யியற்றிச்சென்றார்.

சுசீலை :—அப்படியா. ஆ - ஹா! தமது கனவிலுமா யெம்பெருமான் தண்ணொளிகாட்டினார், என்ன கருணை.

சிவசருமர் :—என்ன (ஆச்சரியத்துடன்) நீயுமேதேனுங் கண்டாயோ?

சுசீலை :—ஆம்.

சிவசருமர் :—(சிவத்தையுன்னி) முக்கட்பெருமானே! முழுமுதற் கடவுளே! திக்கெட்டுந் துதிக்குந் தெள்ளமுதே! மந்திர மொழியினும், அம்மொழியின் முடிவினும், சகல ஆகமங்களினும், இருட்டினும், களங்கமற்ற ஆகாயத்தினும், ஆராய்ந்தறிந்த அறிஞர்கள் அகத்தினும் அன்பரிடத்தினும், மூன்றவஸ்தையினும் விளங்குவா யென்று வேதாகமங்கள் கூறுவது உண்மையே. (நாயகியைப்பார்த்து) கண்மணி உனது கனவினுமா உயர்சிவம் அருள்நோக்கங் காட்டினார்? நன்று, நன்று. உற்றவாறுதா னென்னே. விபரமாகச் சொல்வாய்.

சுசீலை :—பதியே! பரம்பொருளின் திருவிளையாடலைப் பாவையான் பகரவெளிதோ! ஆயினும் தேவரீர் திருவுளப்படியே தெரிவிக்கின்றேன்.

எதுகுலகாம்போதி—ஆதி.

கண்ணிகள்.

விருத வேதியர் போல் பரசிவமும்
விளங்கியதுஞ் சொல்வேன்
விருத ஞானக் கண்ணுதல் பெருமான்
நிகழ்த்தியதும் விள்வேன் (விருத)

பெறுதற் கரிய தாம் பிள்ளையாய்வந்து
பிறந்திடுவே னென்றார்

வரத வபயமுங் காட்டி உம்மையும்
வலிந்தாள் வேனென்றார் (விருத)

பொருவில் நிதியுடைய திருவெண் காடனுக்கே
புகழுடனென்னை யீந்து

நிறை பொருள் பெறுவீர் அறமதுமுலகில்
நீடுமென்று ருகந்து. (விருத)

நாதா! நம்மையாளுடைய யெம்பெருமான் விருத்தவேதியர்போல் வேடமதுற்று ஜடைமுடியும், புலித்தோலுடையும், யோகபட்டையு, மெய்யோபவீதமும் விளங்க, அபயவ்ரத மென்னு மிரண்டு கைகளையுங்காட்டி, அன்புடையீர்! யாம் நாளையுதயத்தில் காருண்யாமிர்த தீர்த்தக்கரைக்கடுத்தவில்வமரத்தடியில் ஒரு குழந்தைவடிவமாகவமர்ந்திருப்போம், நீங்களெம்மை காவிரிப்பூம்பட்டினத்துக் கப்பல் வர்த்தக வைசியகுலதிலகனாகிய வெண்காடனுக்கு விற்று என்னிறைக்குச் சரியாகப் பொன்பெற்று உங்கள் வறுமைப்பிணியை யொழித்துக் கொள்ளுங்களென்று திருவாய் மலர்ந்து மறைந்தனர். (சோர்வடைகிறார்)

சிவசருமர் :—(ஆச்சரியத்தோடு) ஹா! அன்பே! யான்கண்டது மதுவே. சிவபெருமானே! தேவரீருடைய திருவிளையாடலை யாவராலெடுத்துரைக்கவாகும். எம்மாற் செய்யப்படுவதெல்லாம் உம்முடைய செயலேயாகும். பெண்ணணங்கே! உன்னி வருந்துவதா லென்னபயன். அண்ணல் கட்டளைக்கு அன்னியமாக அணுவும் எண்ணப்படாது. கட்டாயம் விற்றே ஆகவேணும். பகலவன் உதயமானான். அகமகிழ்ச்சியுடன் அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஆக்ஞைப்படியே செல்வோம்.

சுசீலை :—சித்தப்படியே.

(இருவரும் செல்கின்றார்கள்)

அங்கம் I. காட்சி IV.

இடம் :—காவிரிப்பூம் பட்டினம். (சயனக்கிருஹம்)
காலம் :—நள்ளிருள்.
நடர் :—திருவெண்காடர், சிவகலை

[திருவெண்காடர் கனவில் சிவபெருமான் விளங்கி தாம் குழந்தையாக அவதரித்திருப்பதாகக்குறிப்பிட்டு மறைகிறார் திருவெண்காடர் விழித்து, திருவருளை நினைந்துத்துதிக்கின்றார்.]

(மவுனமாக விருக்கிறார்)

சிவகலை:—பிராணபதி ! தாங்கள் கண்ட கனவிற்காகச் சந்தோஷப்படுவதை விடுத்து வாடிய முகத்தோடு மவுனங் கொண்ட காரணமென்னே?

இந்துஸ்தான்—ஆதி.

வாடுவ தேனையா வதனமின்று (வாடு)

வீடுற நல்கும் விமல நற்சிவமும்
விளம்பிய தேவருமே மகிழ்தருமே (வாடு)

தானே கனவில்வந்து தண்ணருட் காட்டிய
தயாபரனுர் வருவார் அருள்தருவார் (வாடு)

அன்பருள்ளத்தி லென்றும் அமையுறும்தெய்வம்
அறைந்தது போலாகும் வினைகளேகும். (வாடு)

பிராணேசா! கண்டது கனவுதானே என்று சந்தேகிக்கின்றீரோ அன்று! அன்று!! தமது கலியைத்தீர்க்க வன்றோ வலியேவந்து அனுக்கிரகஞ் செய்தார். யோசித்துப்பாருங்கள். எப்போது அப்பன் அருள் நோக்கம் வைத்தனரோ அப்போதே சகலமும் அடைந்தவர்களானோம். சிந்தனை எதுக்கு?

திருவெண்காடர்:—பெண்பாவாய்! என் சிந்தையெல்லாம் சிவத்திற்கே. அண்ணலைக் கண்ணால் கண்டாலன்றி என் கவலைதீராது. (சிவத்தையுன்னி) அப்பனே, ஆதியே, ஒப்புயர் வில்லாத மணியே, உன்னை எப்போது காணப்பெறுவேனோ?

நாதநாமக்கிரியை—ஆதி.

பல்லவி.

கண்டாற் கலிதீரும், கருணைவடிவுடைய
கமலவதனங் கண்ணாற் (கண்)

அநுபல்லவி.

அண்டாண்ட பகிரண்ட மூர்த்தி
கொண்ட நீல கண்ட சொரூபனைக் (கண்)

சரணம்.

மாசிலாத மணி மாலயன் தேடிய
மாமணி மன்றுண் மாநட மாடிய
தேச வாச பிரகாச பாதாம்புய
தாசர் நேச தயாபர வீசனைக் (கண்)

சிவமே மெய்யன்போடு அஞ்சலி செய்யுமடியார்களுக்கு தனுகரணபுவன போகங்களைக் கொடுத்து ஆட்கொள்ளும் வள்ளலென்று அருமறைகள் கூறுவதுவுண்மையே "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட்பேறல்லபிற" என்றபடி புத்திரப்பேறில்லாது வருந்தியிருந்த எமது பெருங்குறையைப் போக்குவதற்கோ தேவரீர் திருவுளங்கொண்டு கனவினில் வந்து அருள்நோக்கங்காட்டியது. தமது திருக்கருணைப் பெருக்கத்தை என்னென்று புகழ்வேன்.

(மனைவியைப்பார்த்து) கண்மணி, ஒப்பற்றப்பரம்பொருளே நமக்கு மகவாகத் திருவுளங்கொண்ட புண்ணியத்திற்கு மெல்லையுளதோ இதனினும் பெறத்தக்கப்பேறு வேறுளதோ.

ஆரபி—ஆதி.

பல்லவி.

நமது தவமது நன்று பலித்தது, (நம)

அநுபல்லவி.

அமைவதரிதரிது அவனிதனிற் பெரிது (நம)

சரணம்.

மன்றுளாடியசிவ மாமணியே இனிது
மைந்தராகவந்தது மாதவப்பேறிது
துன்றும்பிறவி யெனத்துயர்கொளும் பெருமால்
இன்றேயொழிந்தது ஈசன் திருவருளால் (நம)

இன்றே நாம் பிறவித்துன்பத்தினின்றொழிந்தோம். காலதாமதமாகின்றது. இனி அரை நிமிடமும் தாமதிக்கப்படாது. இப்போதே நமது அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அப்பன் குறிப்பிட்டுச் செப்பிய இடத்திற்கே செல்வோம்.

(இருவரும் போகின்றார்கள்.)

## அங்கம் 1. காட்சி V.

இடம் :—காவிரிப்பூம்பட்டினம்.

காலம் :—காலை.

நடர் :—சிவசருமர், சுசீலை, திருவெண்காடர், சிவகலை.

(சிவசருமரும் சுசீலையும், ஓர் தட்டில் மகவை கிடத்துகிறார்கள். திருவெண்காடர் ஈசன் கட்டளையின்படி மீற்றொரு தட்டில் ரத்தினக்கற்களை கொட்டுகிறார். சம நிறை நிற்காதது கண்ட சிவசருமர், மனக் கலக்கமுற்று)

சிவசருமர் :—ஆ, ஹா! இதென்ன அதிசயம் இரத்தினங்களைத் திரளாகக் குவித்தும் சமநிறையாக வில்லையே! யெம் பெருமானே இதுவும் உனது சோதனையோ ?

தேசிகம்—ரூபகம்.

கண்ணிகள்.

சுத்தசைதன்ய சுயம்பரஞ்சோதியே சோதிப்பதேனிதியே
மெய்த்திறம்பூண்ட வடிமையானல்லவோ முத்தர்துதிபதியே

மோனநிலைவுயர் ஞானமுனிவருட் க்யானமயதாதா
தீனதயாபரனேயினுஞ் சோதனை செய்கிறீர் என் வாதா

பொன்னூற்புகழ்பெற வெண்ணினேனில்லையே புண்ணியர் பெருமானே
உன்னடிமையென்ப தண்மையானால் நிறை நின்றிட செய்யரனே

சிவசருமர் :—தடுத்தாட்கொள்ள வந்ததயாநிதி! மின்போலழியும் புவன போகத்தில், இவ்வளவு பற்றுதலுடையவனென்று உலகம் வசைமொழி கூறுவதற்கோ இவ்வாறு திருவிளையாடல் செய்வது. அடியேன் புவனபோகங்களையனுபவிப்பதற்குப் பொருள் வேண்டினவனல்லவே! சிவனடியார்களின் பொருட்டே சிந்தித்தவனென்று ஒப்பற்ற தமது திருவுளம் அறியுமே, தேவரீர் ஏன்! என்னை இவ்வாறு சோதிக்கவேண்டும். ஐயனே யான் செய்யடிமை மெய்யானால், உய்யும்படிக்குத் திருவருள்கொண்டு சரிநிலையாய் நிற்க அருள் புரியவேண்டும்.

(சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்கிறார்.)

தராசு சரியாய் நிற்கின்றது.

திருவெண்காடர் :—கிருபாசமுத்ரா! மலர்ந்த செந்தாமரை மீது அன்னங்களமர்ந்து ஒளிரும் குற்றமற்ற வளமிகுந்த திருவிடைமருதூரில் எழுந்தருளிய தேவா! ஞானநந்தமாய்த் துலங்கும் தேவரீரது சோதிவடிவிலே யெம்மையும் சேர்ப்பிக்கும் பொருட்டோ? இவ்வடிவு கொண்டது. தமது திருவிளையாட்டை இன்னதென்றுணரவல்லேனல்லேன். என்னாற் செய்யப்படுவனவெல்லாம், உம்மாலெழுந்த உணர்ச்சியே யென்றுணர்ந்தேன்.

சிவசருமர் :—திருவெண்காடரே! ஐயன் கட்டளையின்படி செய்ய பாலனை கையிற்பெற்றுக்கொள்ளும்.

(கையில் வாங்கிக்கொண்டு.)

திருவெண்காடர் :—(முகமலர்ச்சியுடன்) உத்தமசீலரே, சித்துருவாக வந்த இக்கர்த்தனை யான் புத்திரனுகப் பெறுவதற்கு யெத்தனையுகந் தவஞ்செய்தேனோ!

சிவசருமர் :-திருவெண்காடரே! புகலவும் வேண்டுமோ? "மறலிசெயன் மாற்றிவயதாணுற்பெற்ற திறன்மகப்பேருஞ் சிவசிவா பெறுபே, றெழுபிறப்புந்தீயவை தீண்டாபழி பிறங்காப் பண்புடைமக்கட்பெறின்" என்றும் "பண்ணியபயிரிற்புண்ணியந்தெரியு"மென்றும் வாக்கியங்கள் வீணுகவா பிறந்திருக்கின்றது. அதினும் மருதவாணரே மகவாக வந்து வாய்ப்பதென்றல் தவமா! எத்தனையோ யுகந்தோறுஞ் செய்த மாதவ மென்றல்லோ ஓதல்வேண்டும். காலஹரணமாகின்றது யாங்கள் வாஸஸ்தலமேக வேண்டும்.

திருவெண்காடர் :—சித்தம் அப்படியே செய்யுங்கள்.

[சிவசருமர் மனைவியுடன் விடைபெற்றுக்கொண்டு தங்கள் வாஸஸ்தலம் ஏகுகின்றார்கள்.]

**திருவெண்காடர்** :—தெய்வசிகாமணியே! தினமணியே மெய்ப் பலனளிக்கும் ஒண்மணியே, செய்யொளிபரவும் கண்மணியே! மெய்யறிவின்ப வடிவமாகிய துய்யபாலா எமது கையினால் எடுத்து அணைத்து முத்தமிடுவதற்கு முன் செய்த தவந்தானென்னே?

[பேரானந்தத்தோடு மனைவியை நோக்கி]

## சந்த விருத்தம்.

பெண்ணே உனதன் பின்படி பேறாகியபுதல்வன்
விண்ணோர்துதி விமலன் சிறுவருவாகிய சீலன்
தண்ணார்மதி யொளிமேவிய தனையன் புகழனையன்
கண்ணே பெருந்தவமே இது கைபெற்றிடு நலமே

[மனைவிகையில் தருகிறார்.]

கண்மணி கண்ணுக்கினியானும், கற்கண்டின் சுவையானும், எண்ணுக் கரியானும், இயம்பொணாப் பேறானும் இவனன்றோ? பெண்மணி! நீசெய்த புண்ணியமே புண்ணியம்.

(சிவகலையம்மை முத்தமிட்டு)

**சிவகலை** :—தெள்ளிய வமுதமே! தேனே, கற்கண்டே, பிள்ளைக் கலிதீர்த்துப் புகழ்தந்த பெருமானே! இன்றே என்னுள்ளக் கவலை நீங்கியது (நாயகனை நோக்கி) அன்பிற்கினிய நாதா!

சுத்தபங்காளா—ஆதி.

பல்லவி.

நலமே நாம் செய்த பூசாபலமே
நவிலரும் புகழ்சேர் புவியினில் நவமே

அநுபல்லவி. (நல)

குலமணியாகவே குழந்தையாய் சிவமே
தலமதில் வந்தது தகையசீர் தவமே (நல)

சரணம்.

பெற்றனம் பிறவாப் பேறரும் செல்வம்
உற்றப்பிறவி தனில் உயர்பதம் செல்வோம்
அற்றது வினை இனியணுகினும் வெல்வோம்
பற்றறுஞ் ஞானியர் பதஞ்சிரங் கொள்வோம் (நல)

பிராணபதி! திருவே உருவாக வந்த இச்சிறு மகவின் பேரழகை யென்னென்று சொல்வது. சிறந்த முடியில் சிகழிகையழகும், அரனார் திருநீறணிபெறும் நுதலும், கருணைத்துலங்கும் கண்மணிப் பார்வையும், நறுவியகுமுத மலரெனும் நாசியும், மறைமணம் வீசும் மலர்ச் செவ்வாயும், குறிதிகழ்கண்டமும், பரந்த செவிகளும், நிறைந்தமார்பும், அறமது அளிக்கும் அழகிய கைகளும் தொந்திவயிறும், தூய்மணிவுந்தியும், அந்த மிகுந்த ஆரெழில்துடையும், கந்தமரைபோல் கவின்பெறும் பதங்

களும், விளங்கி பூரணச்சந்திர விலாசம் பொருந்திய இப் புதல்வனைப் பெற்ற புண்ணியத்திற்கும் வரம்புமுளதோ! புண்ணிய புருஷராகிய தமது சேர்க்கையைப் பெற்ற தினால் எனக்கு உற்ற பெரும்பாக்யம் இதுவேயாகும்.

திருவெண்காடர் :—அன்பிற் கினியாளே! ஆருயிரென்மனையாளே! இன்பப் பெருக்காமென் எழில்கொண்ட இல்லாளே! நாம் எண்ணிய எண்ணம்போல் புண்ணியம் பழுத்தப் புதல்வனைப் பெற்றோம். இனி கண்ணிமைப்போல் காப்பது நமதுகடமையாகும். வா குழந்தைக்குபாலூட்டுவிப்போம்.

சிவகலை :—சித்தப்படியே.

(போகிறார்கள்)

## அங்கம் 2. காட்சி 1.

இடம் :—வீதி.

காலம் :—காலை.

நடர் :—உபாத்தியாயர், விவேகசிகாமணி, பள்ளிக்கூடத் துப்பிள்ளைகள் முதலியோர்.

பிள்ளைகள்—திரைக்குளிருந்து பாடுகிறார்கள்.

நமச்சிவாய வா அழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க.

[உபாத்தியாயர் தனது வீட்டிற்குப்பின் வீதியாக விவேக சிகாமணியுடன் வருந்தருணம் பிள்ளைகள் பாடுங் குரலோசை கேட்கிறது. வலது செவியில் சுட்டு விரலைவைத்துக் கவனிக்கிறார்.]

**வாத்தி** :—விவேகசிகாமணி! என்ன குரலோசை கவனித்தனையா ?

**விவேகசிகாமணி** :—ஆம். ஆம். ஐயா கவனித்தேன் ஆனால் மங்கலமென்னும் பதத்தில் “அ” வென்னும் உயிர் முதலில் புணர்ந்து அமங்கலமாக ஒலிக்கின்றதே என்று தான் சிந்திக்கிறேன்.

**வாத்தி** :—சீ, மடப்பயலே யான் கலக்கத்தோடு கவனித்தையா வென்று கேட்டால் இலக்கணத்தைப்போட்டு அளக்கிறாயே தடியா! பேசாதிரு.

**விவேகசிகாமணி** :—சித்தம், சித்தம், (இரண்டுகைகளையும்வாயிற் புதைத்துக் கொள்கிறான்)

(திரைக்குள்)

நமச்சிவாய வா அழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க

வாத்தி :—(திடுக்கிட்டு அவசரமாக) சிகாமணி! சிகாமணி!! கவனி! கவனி!!

நமச்சிவாய வா அழ்க, நாதன் தாள் வாழ்க,
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க.

விவேகசிகாமணி :—(தலை அசைத்தவண்ணமாக) ஹா ஹா. சரி, சரி ஐயா.........யாருக்கோ.........சேட்பம்.........சேட்பம் கட்டி யிழுக்கிறது போலே இருக்குது திருவாசகம் படிக்கிருங்கோ:

வாத்தி :—எந்த இடத்தில் கவனித்தனையா ?

விவேகசிகாமணி :—ஹா நம்ப வூட்டிலே தாங்கோ

வாத்தி :—நம்முடையவீட்டிலா? (தனிமையில்) என்ன ஆச்சரியம் இப்போது தானே கமலத்தினிடம் பேசிவிட்டு வந்தோம் (விரைந்தோடி பின்கதவைத்தட்டி) கமலம், கமலம்.

விவேகசிகாமணி :—(அவசரமாக) ஐயா, ஐயா, உமக்கென்ன பயித்தியமா! கொல்லைக்கதவாச்சே அதைத் தட்டுரு! ஆர் பேசுவாங்கோ! அடடா பகல்காலத்திலேயே உருப்படி தெரியாது தடமாடுகின்றீரே.

வாத்தி :—(திகைத்தவராய்) அப்படியா! வா! வா!! முன்புறம் போவோம் (விரைந்து ஓடுகிறார்.)

**அங்கம் 2.** **காட்சி 11.**

இடம் :—பாடசாலை.
காலம் :—காலை.
நடர் :—மருதவாணர், பிள்ளைகள் முதலியோர்.

மருதவாணர் :—(சிறுவர்களை நோக்கி) அப்பா தம்பிமார்களே!

பிள்ளைகள் :—ஏனப்பா.

முன்னம் சொன்ன அகவலை மறுபடியும் நீங்கள் ஒரே த்வனியாகச் சேர்த்துச் சொல்லுங்கள் எதோ ஆகட்டும்.

நமச்சிவாய வா அழ்க, நாதன் தாள் வாழ்க,
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க

[பிள்ளைகளனைவரும் ஒன்று கூடி பாடுகின்றூர்கள். உபாத்தியாயர் விவேகசிகாமணியோடு வீட்டுக்குள் சரேலென்று நுழைகிறூர்.]

வாத்தி :—(விரைந்து) கமலம், கமலம், கமலம்.

கமலம் :—(உள்ளிருந்து) ஏன் சுவாமி.

வாத்தி :—அடடா.

[கோபத்தோடு பிள்ளைகளைத் திரும்பிப் பார்த்து.]

வாத்தி :—துக்கடா

அடடா மொட்டைப்பயல்களே போதும்
அடக்கி சும்மா நில்லுங்கள்
அடாத அந்தப் பாடலைச்சொல்ல
ஆக்கினதார் சொல்லுங்கள்
அடிப்பேனே-ஒடிப்பேனே-துடித்திடக்
கன்னம் புடைப்பேனே (அட)

பிள்ளைகள் :—

அருமை ஐயரே சரணம் துய்யரே
பொறுமை செய்வீரே தரும மெய்யரே

வாத்தி:—பொறுப்பேன் உண்மை விள்ளுங்கள். (கோபத்தோடு) மடப்பயல்களே! இப்படி கன்னு பின்னு வென்று உளறும்படி உங்களுக்குக் கற்பித்துக் கொடுத்தது, யார்? அடே சம்பு.

சம்பு:—(நடுக்கத்தோடு) ஐயா! ........ ஐயா!! ........ ஐயா!!!

வாத்தி:—தடிப்பயலே சுருக்கச்சொல்.

சம்பு:—(முதுகைத்திருப்பி) இதோபாருங்கோ சுருக்கத்தா அடிச்சாங்கோ.

வாத்தி:—அடே, மூடா ....... நான் கேட்டதற்குப்பதில் சொல்லாது. (அடிக்க நெருங்குகின்றார்.)

சம்பு:—இல்லீங்கோ! இல்லீங்கோ!! இதோமூடிக்கினே.

வாத்தி:—என்னடா! மூடிக்கினே

சம்பு:—அதா மூட சொன்னிங்களே!

வாத்தி:—(கோபத்துடன்) மடையா! போ. நில்லாதே (நித்தியானந்தத்தைப்பார்த்து) நித்தியானந்தம் இங்கே வா.

நித்தியானந்தம்:—(பயபத்தியுடன்) சுவாமி.

வாத்தி:—சற்று முன்பாக நீங்கள் ஒன்று கூடி இரைச்சலிட்டுப் பாடினீர்களே! அது உங்களுக்கு யார் சொல்லிக் கொடுத்தது?

நித்தி:—(நடுக்கத்துடன்) சுவாமி என்னை ஒண்ணுஞ்செய்யாதிங்கோ உண்மையைச் சொல்லி விட்டிறே. (அடிக்கொண்டே) அது கெட்டது இண்ணு அப்போவே சொன்னேங்கோ நீ சொல்லுடா சொல்லுடா இண்ணு தொந்தரவு பண்ணுங்கோ எல்லா ஒறக்கோ சொன்ணுங்கோ நா மொள்ள சொன்னேங்கோ. இதுதாசாமி.

வாத்தி:—முட்டாள் நான் கேட்டதைவிட்டு, நாட்டியமாடி நான் மெல்ல சொன்னே அவர்களுறத்தி சொன்ணார்களென்று நடிக்கிறுயே கள்ளப்பயலே! கொஞ்சந் திருடினல் திருடனல்லவோ? அது உங்களுக்குச் சொல்லித் தந்ததாரடா.

நித்தி:—அவர்தா சின்னையா சாமி (மருதவாணரை சுட்டிக்காட்டி)

வாத்தி—யார் மருதவாணனா?

நித்தி—ஆம் சாமி.

வாத்தி:—(பெருமூச்சுடன்) ஆ. அப்படியா! அப்பா மருதவாணா! நீயா கற்பித்துக்கொடுத்தனை?

மருதவாணர்—ஆம் சுவாமி.

வாத்தி:—நன்றாய் இருக்கிறது. லக்ஷணம் நான் உன்னை மெத்தவும் புத்திசாலியென்று மதித்து இருந்தேன். அதற்கு ஒத்தே செய்தாய். நல்ல பிள்ளைதான் கல்விகற்பித்துக் கொடுத்த வாத்தியாருக்குக் கேடுவரவேண்டுமென்று நினைத்து செய்தாயே அதுவே போதும்.

மருதவாணர்:—துய்யமன முடைய ஐயா.

எதுகுல காம்போஜி—ஆதி.

பல்லவி.

செய்த பிழை தான் யாதோ (செய்த)

அநுபல்லவி.

சொல்லுவீர் பொல்லாத அல்லல் வினைய யானும் (செய்த)

சரணம்.

வையகந் தன்னிலே உய்யும் வகை சொன்ன
ஐயனே துய்யனே மெய்யார் மனம் நோக (செய்த)

பெரியார் குணம் நன்று பொறுத்தல் தகைமை யென்று
பேசு மோர் வாசகம் மாசின் மனத்தாயின்று (செய்த)

ஐயா! அடியேன் செய்த பிழையாதோ, விபரமாகச் சொல்லவேண்டும்.

வாத்தி:—விபரமா..............கேட்கிறாய் ஆம். ஆம் சரி...... இப்போது எல்லோருக்கும் கற்பித்துக்கொடுத்தது வியாபகத்தில் இல்லையோ?

மருதவாணர்:—சுவாமி இருக்கிறது மணிவாசகப்பெருமான் திருவாய்மலர்ந்த திருவாசகம்.

வாத்தி :—திருவாசகமா! (முகத்தைச் சுளித்து) அது எந்த சமயத்தில் படிக்கவேண்டுமென்று உனக்குத்தெரியாதோ?

மருதவாணர் :—சுவாமி தெரியாதே திருவுளம்பற்றித் தெரிவிக்கவேண்டும்.

வாத்தி :—மரணகாண்ட மல்லவா?

மருதவாணர் :— சிவா சிவா (மருதவாணர் இரு செவிகளையும் கைகளால் மூடிச் சற்றுப்பொறுத்து) கல்விக்களஞ்சியமாகிய தங்களுக்கு அடியேன் என்ன சொல்ல வல்லவன். சுவாமி! உலக போகத்தின் காரணமாய் சிதாத்மாவைமறந்து. தேகாத்மாவையே பெரிதாகக்கொண்டு பாவமும், பழியும் கொடுப்பதற்கேதுவாகிய ஜென்மாந்திரப்பழக்கத்தாலுறிய சித்தப்பிரமையே யன்றிவேறல்ல. திருவாசகமாகிய பெருவாசகம் ஒப்பற்றத் திருவருளால் சொரிந்த மதுரத் தேனாகும். அவ்வாசகத்தை கொடியபாதகங்களைச்செய்த தீயோர்கள் கேட்கினும், தங்கள் கொடிய செய்கையை மாற்றி நன்மையே செய்ய உட்படுவார்கள். எப்போதும் மனனஞ்செய்பவர்களுக்கு செப்பமாகிய மோட்ச சாதனங்களுக்கு மனதைத்தூண்டும். சுவாமி! மனம் இயல்பாக ஆநந்த வடிவமுடையது. அஃது பஞ்சேந்திரியங்களின் சேட்டையால் உலகவிவகாரத்தில் பந்தப்பட்டு பம்பரம் போல் ஓயாது, சுழலுந் தகைமை யுடையது. அதின் வசப்பட்டுமயங்கி பந்தத்திற்கேதுவாகிய விடயங்களிற் சென்று பொய்யை மெய்யென்றும், மெய்யைப் பொய்யென்றும் எண்ணிவருந்துகின்ற ஜீவர்கள் உய்யும்படி கருணையோடு "நமச்சிவாய" வென்னும் ஸ்தூலபஞ்சாக்கரத்தையே காரணமாகக்கொண்டு ஸ்ரீ மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்ததே திருவாசகமாகும்.

விருத்தம்.

ஒருமொழி யாலே சுருதியாகம நூலுயர் புராணமு மலா மொழியு[ழியு
மொரு மொழி யாலே சரியை நற்கிரியா யோக பாவனையெலா மொ
மொரு மொழி யாலே யண்டபூதங்க ளொடுங்கிடுந்தன்னியல் தோன்று
மொரு மொழி சும்மா விருத்தலா மதனு லொப்பிலாச்சிவபதமடைவார்.

என்ற ஆப்த வாசகங்களுக்கிணங்க நமச்சிவாயவென்னும் அரிய பெரிய மஹா மகிமை பொருந்திய வாசகத்தை மரணகாண்ட மென்று புறக்கணித்துச் சொல்ல வந்தது வியக்கத்தக்கதே யாகும். அதுவன்றியும் பண்டிதனிடத்தில் பலவித அவுடதங்களிருக்கினும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு முக்கிய குணங்களிருப்பது போல் சிவபெருமான் திருப்புகழைச் சொல்லும் பலவாசகம் இருக்கினும் மரணத்தருவாயில் ஜீவர்கள் பாச பந்தத்தை ஒழித்து ஒப்பற்ற உயர்நிலையிற் கூட்டுவது திருவாசகமே யாம். ஆதலால் சத்துக்களால், முக்கியமாய், அந்தகாலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

விவேகசிகாமணி :—(ஒருபுறமாம்)சம்பு வாத்தியாரை பாத்தையா ததிகணதோம் (ஆடிகாட்டி)

சம்பு :—(கையால் வாயை மூடி) சொம்மா இருடா.

மருதவாணர் :—

நேரிசையாசிரியப்பா.

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணன்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே.

மருதவாணர் :—முழுமுதற்பொருளாஞ் சிவபெருமானால் திருவாய்மலர்ந்த பழ மறையினும் சிறந்த மகிமையுற்ற தென்றும், கருங் கல்லைப்போன்ற மனதையுங் கரையச்செய்து பக்தி யென்கிற பெரிய சமுத்திரத்திற் கொண்டுபோய்

சேர்க்குந் தகைமையுடையதென்றுந் தெளிவாய் விளங்குகின்றது. ஆகையால் எந்தகாலத்தினும் சிந்தையில் தியானஞ் செய்தல் முக்கியமென்று மனதுற்றதால் அனைவரையுஞ்சொல்லும்படி வற்புறுத்தினேன் கடாக்ஷமானால் இன்னுஞ் சொல்கின்றேன்,

வாத்தி:—அப்பா போதும்! போதும்!! மருதவாணா! இங்கே வா, (ஒருபுறமாக நிற்கச்செய்து) மருதவாணா! நான் சொன்னது ஒரு பொருட்டாகக்கொள்ளப்படாது நான் கற்றுக் கொடுத்த வித்தையால் விருத்தியடைந்து இருக்கிறாய் என்பது மறந்து விடப்படாது. தெரியுமா யான் இந்த ஊரில் கொஞ்சம் கௌரவமாகப் பிழைக்கத்தக்கவன், என்னைச் சிறந்தவித்வானென்று எல்லோருங்கொண்டாடுகிறார்கள். ஆகையால் (இரகசியமாய்) நான்கேட்டதை வெளிபிரஸ்தாபத்திற்கு கொண்டுவரப்பட்டது. (சால்வையைக் கொடுத்து) இதை வெகுமானமாக வைத்துக்கொள்.

பிள்ளைகள்:—(எல்லோரும் ஒன்றுகூடி பெரிய சப்தமாக) ஓ. ஓ! வாத்தியாரே! தெரியுந் தெரியும் நாங்கோ சொல்லிவிடுவோம், அல்லொ தெரியும்.

விவேகசிகாமணி:—(கெட்டியாய் வாத்தியாரைப்பிடித்துக்கொண்டு) தலேகுட்டை யென்னிதுங்கோ.

வாத்தி:—அடடா இதென்ன மோசமாக முடிந்ததே அரைகல்வி முழுமொட்டை யென்ற பழிமொழி நமக்கே அத்தாட்சியாயிற்றே (பிள்ளைகளைப்பார்த்து) அப்பா விடுங்கள்.

சம்பு:—[மேல்குட்டை யென்னதென்று துணியை கெட்டியாகப்பிடித்துக்கொண்டு.) ஹா ஹா விடமாட்டோம் மருதவாணன் என்ன ஒஸ்த்தியோ! நாங்கோ என்னதாழ்த்தியோ! உங்க உளவு தெரிஞ்சி போச்சி சாமி சொம்மா தொங்க பாக்கிறங்கிளோ? முடியாதுங்கோ [பிடித்திழுக்கிறான்]

வாத்தி:—ஆனால் வாருங்கள் கொடுக்கிறேன்.

(யாவரும் போகிறார்கள்)

**அங்கம் 2.** **காட்சி III.**

இடம்:—காவிரிப் பூம்பட்டினம்
காலம் —பகல்.
நடர்:—திருவெண்காடர், மருதவாணர்.

[திருவெண்காடரும், மருதவாணரும் சம்பாஷித்துக் கொண்டேவருகிறார்கள்.]

**திருவெண்காடர்** :—உனதபிப்பிராயந்தான் என்ன?

**மருதவாணர்** :—(பணிவுடன்) தந்தையே தங்கள் அனுக்கிரஹத்தினால் நான்குவேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்துநான்கு கலைக்கியானம் தொண்ணூற்றாறு தத்வம் பதினெண்புராணம் மனுவுக்கியானம் முதலியவைகள் யாவும் கற்றுக்கொண்டதுமன்றி நமது குலத்திற்கேற்றபடி வணிகஞ்செய்வதற்குவேண்டிய கணிதமுதலியவைகளும்கசடறக்கற்றேன் வயதோ பதினாறுகின்றது. ஆகவே அடியேன் விண்ணப்பித்துக்கொள்வ தென்னவென்றால் "நுண்ணிய நூல் பலகற்பினு மற்றுன்றான் உண்மையறிவே மிகும்" என்றபடி எனதெண்ணம் நமது மரபிற்குரிய வணிகச் செயலைச்செய்ய மனமிசைந்ததால் யான் மரக்கல மேறிச் செல்ல விடையளிக்கவேண்டும்.

திருவெண்காடர்.

சாவேரி—ஆதி.

பல்லவி.

செல்வமே நீயேன் பல பல வாய்
சிந்தனை செய்கிறாய் வந்தகுறையாது (செல்)

அநுபல்லவி.

எல்லையில்லாத செல்வம் நமக்கிருக்க
எண்ணினதேனப்பா இன்னும் பொருளைச்சேர்க்க (செல்)

சரணம்.

கப்பல் யாத்திரை செய்திடவுந் தக்க
கால மிது வல்லவே பாலனேமிக்க
ஒப்புமோ மனம் வுன்னை யனுப்புவிக்க
உரிமைதந்தேன் நிதியாவு மனுபவிக்க (செல்)

திருவெண்காடர் :—செல்வமே! என்னவார்த்தை சொன்னாய். கண்மணி எண்ணிக்கையில்லாத ரத்தினங்கள் ஏராளமாக உன்னிடமிருக்க, நீ எதற்காக இன்னுஞ் சேகரிக்க வேண்டு மென்று எண்ணமுற்றாய். அப்பா! ஓயாமற் செலவு செய்தாலும் உள்ளவளவு குறையாதே! தூய மைந்தா, உனது தாயானவள் கேட்டால் தாளாது வருந்துவாளே? குழந்தாய் சர்வசுதந்தரமு முனக்கே தந்துவிட்டேன். நீ கொண்டுள்ள எண்ணத்தைமாற்றி இங்கேயே யிருக்க இசைவாய்.

மருதவாணர்.

பியாகடை—சாப்பு.

பல்லவி.

எங்கும் புகழ் கொண்ட எழிலாருந்தந்தாய்
ஏங்குவதேன் யெந்தாய் (எங்)

அநுபல்லவி.

தங்குலவழி நின்று, தழுவுஞ் சுதனை யென்றும்
தகைமை சான்றோ னென தாரணி சொலுநன்று (எங்)

சரணம்.

சொல்கடந்திட மனஞ்சிறிது மிசையுமோ
செய்தவ மறப்பது சிறந்த செய்கையாமோ
நெல்விற்பத ரென்னும் பிள்ளைபோற் கொள்ளாது
நன்றாக யோசித்து செய்வதே நல்லது (எங்)

மருதவாணர் :—ஆயகலைகளையுணர்ந்த அருமைதந்தாய், தாய்மார்கள் வருந்துவார்களென்று பயந்தா தூயகுல தருமத்தைத் துறப்பது நன்று! நன்று! யான் மைந்தனாக வந்தது எதற்கு? தந்தையாகிய தமது செயலைப் பின்பற்றுவதற்கன்றோ! அஃது தவறினால் “குலத்தைக்கெடுக்கவந்த

கோடாலிக்காம்பு போலல்லவோமுடியும். தந்தையாகிய தாங்கள் என்னைத்தடுப்பது நமது குலத்தின் புராதனதரு மத்திற்கிடையூறு செய்யக்கற்பிப்பதுபோலாகும். முன்னோர் தருமத்தை முறையாய் செய்வதற்கன்றோ பின்னோர் புத்திரன்வேண்டு மென்றுபேணுவது. அது வன்றியும், 'திரைகடலோடியுந் திரவியந்தேடு' யென்ற மூதாட்டியார் அரிய வசனமே அத்தாட்சியாகும். ஆகவே வழக்கமாகிய நமது வணிகச்செயலையே அடியேன் இயற்றிவரும்படி வாக்களிக்க வேண்டும்.

திருவெண்காடர் :—தடமா மதிவிளக்கே தொடர் மொழிக் கிடந்தராமல் அனேக நீதிமொழிகளால் படபடத்து பேசி விட்டனையே? அடடா பழைய தருமத்தின்படி ஒழுகக் கூடாதென்று! எனது எண்ணம் அல்லவே. மழையிலும், காற்றிலும், பனியிலும் மரக்கலமேறிச்செல்லத்தக்கபருவ மல்லவேயென்று சொல்லவேண்டிய கடமையைச் சொன் னேனேயன்றி வேறல்ல. திட சித்தமானால் தடையென்ன அப்படியே செய்ய சம்மதிப்பேன். வா உனது அன்னைக் குத் தெரிவித்து உனதெண்ணத்தைப் பூர்த்திசெய்கி றேன்.

---

**அங்கம் 2.** **காட்சி IV.**

இடம் :—நதிதீரம்

காலம் :—மாலை

நடர் :—மருதவாணர் வைசிய நண்பர்களுடன் மரக்கல மேறி நதியிற் செல்கிறார்.

[சிந்துமகாமுனி சாபத்தால் மச்சவடிவ மான மணிக்கிரி வன் ஜலத்தில் நீந்தி விரைந்து வருகிறான்; அதுகண்டு எல்லோரும் திகிலடைகின்றார்கள்.]

தாயுமானு:—பயத்தோடு அடே.......சுப்ரமண்யா அதோ வருகிற மச்சத்தைப் பார்த்தையா.

சுப்ரமண்யன் :—ஐயையோ! நம்மைக் கொன்று விழுங்குவதற்கோ விரைந்து வருகிறது. (உரத்த சத்தமாக மருதவாணா! மருதவாணா!! நெருங்கிவிட்டதெ.

மருதவாணர் :—நண்பர்களே என்ன! என்ன!!

சுப்ரமண்யன் :—அதோ பாரப்பா காளகூட விஷத்தைப்போல் சீறிவருகின்றது.

மருதவாணர் :— பயப்படாதீர்கள். சந்தடி செய்யாதீர்கள். அனைவரும் குப்புறப்படுத்து மூர்ச்சையடைகின்றார்கள் ஒருவனை மச்சம் இழுத்து விழிங்கி விடுகிறது மருதவாணர் மச்சத்தை ஓங்கி உதைத்து உயிர் துறக்கச்செய்கிறார். காந்தர்வன் முன்வடிவம் பெற்று—அந்தராத்தமாய் நிற்கின்றான்.

காந்தர்வன் :— (கைகுவித்தவண்ணமாக) அப்பனே! — இன்றே தன்யனானேன் கருணாநிதி யானே? மணிக்கிரீவன் என்ற காந்தர்வன் எனது செருக்கால் சிந்துமகாமுனிவரை மதியாது, இகழ்ந்ததனாலடைந்த சாபமிதுவாகும். அன்னவர் திருவாய்மலர்ந்த வண்ணம், தமது திருவடிக்கமலம் படவும், அது நீங்க முன்வடிவம் பெற்றேன். இறைவா! அடியேன் இன்பவீடெய்த, அன்பு பாலிக்க வேண்டும் தயாநிதி.

மருதவாணர் :—அப்படியே ஆகுக! (காந்தர்வன் அந்தரப்பிரவேசம்) (மருதவாணர் துணைவர்களை நோக்கி) நண்பர்களே பயப்படாதீர்கள் எழுந்திருங்கள். (அனைவரும் நடுக்க முறுகிறார்கள்.)

தாயுமானு :—(பயத்தோடு எழுந்து பார்த்து) மருதவாணா! வந்ததே. அது ஒழிந்ததா? (மருதவாணர் ஆகாயத்தைக்காட்டுகிறார்.)

தாயுமானு :—அடடா என்ன அதிசயம் மருதவாணரே' என்ன மச்சமும் மடிந்துக்கிடக்கின்றதே.

மருதவாணர் :—அதிருக்கட்டும் எல்லோரும் இறங்கி முன்னமிந்த மச்சத்தை கரைக்குக்கொண்டுபோய் சேருங்கள் (எல்லோரும் அதைகட்டி இழுத்துக்கொண்டு போய் சேர்ப்பிக்கின்றார்கள்.)

தாண்டவராயன் :—ஐயையோ இதென்ன அநியாயம் அத்தானே காணேமே—அத்தானே காணேமே—அத்தானே காணேமே (அழுகிருன்)

தாயுமானு :—யார்! அமுர்தலிங்கமா?

தாண்டவராயன் —ஆமா-மாமா (மறுபடியும் அழுகிருன்) அக்கா, அத்தா அக்கா, அத்தா!

தாயுமா:—அப்பா மருதவாணு! என்ன மோசமாக முடிந்ததே! அமுர்தலிங்கத்தைக்காணேமே (பரிதாபப்படுகிருன்)

மருதவாணர் :—நண்பர்களே! அஞ்சாதீர் உயிர்துறந்திருக்குமிந்தமச்சத்தை இருபிளவு செய்யுங்கள்(மருதவாணர் காணமற்போன அமுர்தலிங்கத்தை மச்சத்தின் வாறிலிருந்து வெளிப்படுத்துகிருர் யாவரும் ஆச்சர்ய மடைகிருர்கள்)

தாயுமா :—மருதப் பெருந்தகையே! தெய்வச்செயலும் உம்முடைய செயலும் ஒத்திருக்கிறதே தெய்வகடாக்ஷம் பூரணமாய் வாய்ந்துள்ள தாம் எமக்குச் செய்த நன்றியை யாங்களென்றும் மறவோம் (மற்றவரைநோக்கி) அப்பா நண்பர்களே! இப்புண்ணிய புருஷரை நம்மில் ஒருவராக மதிக்கப்படாது இம்மை, மறுமைக்கும் செம்மையைக்காட்டும் பெம்மானென்றே சொல்லவேண்டும், ஒன்று பாருங்கள், இம்முறை தனது சம்பாத்திய மெல்லாம் சிவஸ்தலங் கட்டுந் திருப்பணிக்குச்செலவு செய்து விட்டு, எருமுட்டைகளைத் திரளாக வாங்கி அடிக்கினர். அதுகண்டு நாம் காதாளமிட்டுப் பரிகாசஞ்செய்த போதும் பொறுத்தவரும் இவரே. பின்பு நாம் நடுக்கடலில் காற்றுமழையினுல் கலங்கி நடுக்கமுற்றிருந்தபோதும் அந்த எருமுட்டைகளை நமக்குதவி காப்பாற்றி கரை சேர்த்தவரும் இவரே........என் ஞாபகத்திலில்லையா! அதற்காக நாம் பத்திரமும் எழுதி கொடுத்திருக்கின்றோமே அதுவன்றியும் சொல்லுதற்கு அரிதாகிய அற்புதங்களையெல்லாஞ்செய்து காணமற் போன அமுர்தலிங்கத்தை

யும் உயிருடன் காட்டி கண்களிக்கச்செய்த புண்ணிய வானும் இவரே. ஆகவே நாம் இந்நன்றியை என்றும் மறவாது அவர் செப்புமொழிக்கு ஒப்புற ஒழுகவேண்டும், (அனைவரும் தலை அசைக்கிறார்கள்.)

மருதவாணர் :—நண்பர்களே! அது இருக்கட்டும் பொழுது போயிற்று வாருங்கள், நமது பட்டினம் போய் சேரலாம்.

---

## அங்கம் 3. காட்சி I.

இடம் :—காவிரிப்பூம் பட்டினம்
காலம் :—மாலை.
நடர் :—திருவெண்காடர் சிவகலை அம்மையார்.

அந்தோ எனது கண்களுக் கினிய ஒளியும், எனது காதற் கினிய கிளியுமாகிய மருதவாணனை நினைக்க நினைக்க யென் மனமானது அனலிலிட்ட மெழுகைப்போல் உருகுதே! அந்தோ! ஏனோ! இம்முறை இத்தனை நாளாகியும் திரும்பாமல் தாமதித்து விட்டனன். சென்ற நாலுதினங்களாக அடித்தக் காற்று மழையினால் கரைதெரியாமல் கஷ்டப்படுகின்றனனோ! யாதோ தெரியவில்லையே. மருதப்பா எப்போது உன்னை காணப்பெறுவேனோ?

திருவெண்காடர் :—

முகாரி—ரூபகம்.

பல்லவி.

அப்பா உன்றன் திருமுகத்தை நான் எப்போ காண்பதோ (அப்)

அநுபல்லவி.

ஒப்பாரில்லாச்செல்வமே, மனம்
எப்படி சகிப்பேன் தினம் (அப்)

சரணம்.

கனிவாய்மொழி கேட்ட செவிகள் கனங்குழையுதே
இனிவாய் உன்னை காணுங்கண்கள் கண்ணீர் சொரியுதே
கனகார் புயகன் மணியே, கவலைதீர்த்த யென் கண்மணியே (அப்)

தேனே, திருவே, தேடற்கரிய திரவியமே, கோடிக்கணக்கான திரவியங்கள் குவித்திருக்க, உனக்கேனோ, இந்த பாடு, கண்மணி! மருதவாணா! உன்னைக் காணக்கண்கள் தேடுதே, கட்டிக் கரும்பே, கனிரசமே, எம்மை விட்டுப் பிரிந்து நெடுநாளாயினவே, கடல் யாத்திரை யென்று நினைக்கும்போதே என்குடலைக்கலக்குதே யென்ன திடமாகச் சென்றனையப்பா. கடந்த நாலு தினங்களாக அடித்த காற்றுமழையினாற் கலங்கி திசைமாறி நெடுந்தூரந் திகைத்தலைகின்றனையோ? கரை தெரியாது மிகக் கலக்கமது கொண்டனையோ? தக்கத்துணையில்லாமல் தனித்து வாடுகின்றனையோ? யாதோ தெரியேன் மைந்தா உனது ஒளிமுகத்தைக் காணாது ஒரு துளிநீரும் அருந்தேன் இது உண்மை.

(துறைமுகத்து ஏவல்) ஐயா சாமி சாமி வந்திட்டாருங்கோ.

திருவெண்காடர்.—(திடுக்கிட்டு) யாரப்பா வந்தது
(ஏவல்) உங்க பிள்ளை சாமி.

திருவெண்காடர்:—யார் மருதவாணனா?

ஏவல்:—ஆமாங்கோ.

திருவெண்காடர்.—அப்படியா! மெத்த சந்தோஷம்.

ஏவல்:—என்ன சந்தோஷங்கோ.

திருவெண்காடர்:—(ஏக்கமாக) என்ன! என்ன!! சொல்லப்பா.

ஏவல்:—ஒண்ணு மில்லைங்கோ எருமுட்டை இருக்குதுங்களே அது தா கொண்ணாந்தாறு.

திருவெண்காடர்:—ஏனப்படி.......... ஹா— ஆயினும் பெரிதல்ல (மனைவியை நோக்கி) மாதே மைந்தனுக்கு வேண்டிய உணவாதிகள் சித்தப்படுத்து. இதோயான் விரைவிற் சென்று அழைத்து வருகிறேன்.

## அங்கம் 3. காட்சி II.

இடம் :—துறைமுகம்

காலம் :—முற்பகல்

நடர் :—திருவெண்காடர், மருதவாணர் முதலியோர்.

[கப்பல் துறைமுகத்தில் வந்து நிற்கின்றது. மருதவாணர் இறங்குவதைக் கண்ட திருவெண்காடர் விரைந்து, அவரைச்சேர்த்து, அணைத்து முத்த மிடுகிறார்.]

திருவெண்காடர்:—ஆ, என்னருமைச் செல்வா! வந்துவிட்டனையா!

மோகனம்—ஆதி.

பல்லவி.

கண்ணே உன்னைக் காணக்கண்கள் செய்த
புண்ணியமே பெரும்புண்ணியமே. (கண்)

அநுபல்லவி.

கண்டேன் திருமுகம் களித்தனன் மிகவே
கவலையுங்கதிர் கண்டப் பனிபோ லேகவே (கண்)

சரணம்.

செல்வமே உனதன்னைத்தேடி—உன்னால்
சிந்தைகலக்கங் கொண்டாள் வாடி—வந்த
நல்ல ஒருவன் சொல்லை நாடி—அப்பா
நானே வந்தேன் விரைந்தோடி—என் (கண்)

திருவெண்காடர் :—என் கலிதீர்த்த கண்மணியே! உன் ஒளி முகத்தைக் காணாது வருந்தி இருந்த எங்களைக் களிக்கச் செய்தகற்பகமே! இனி கப்பல் யாத்திரையைக் கனவிலும் நினைக்கவேண்டா மப்பா.

மருதவாணர் :— பிதா! இன்றோடு முடிந்து விட்டது. இனி மூட்டை ஒன்றுதான் மிகுதி, அது அங்கே இருக்கின்றது.

திருவெண்காடர்:—அதை யான் கொண்டு வருகிறேன் (அருகில் இருப்பவரைப் பார்த்து) அப்பா மருதவாணனைக் காத்துக் கொள்ளுங்கள். யான் கப்பலுக்குச் சென்று வருகிறேன்.

[திருவெண்காடர் கப்பலை நாடிச் செல்கிறார்; மருதவாணர் ஒருவர்கண்ணுக்குப் புலப்பாது மறைகிறார்.]

**அங்கம் 3.** **காட்சி III.**

இடம்:—திருவெண்காடர் இல்லம்.
காலம்:—பிற்பகல்
நடர்:—சிவகலை, மருதவாணர்.

**மருதவாணர்** :—அம்மா! அம்மா!! அம்மா!!!

**சிவகலை** :—ஆ, என் கண்மணி, வந்து விட்டனையா!

இந்துஸ்தான்—ஆதி.

கண்ணிகள்.

என் தனருமை பாலா—புகழ்பெறவே
வந்தனையா சீலா—இரவும் பகல்
சிந்தை கலக்கங் கொண்டோம் திருமுகம்—காணுது (என்)

என்றும் உனது நினைவாய்—மகனே
என்று வருந்துங் கவலை,—போக
இன்றே நன்ருக மனமது—மகிழ்ந்தேனே. (என்)

பலவிதபலகாரம்—உனக்கு
நலந்தரும் ஆகாரம்,—செல்வமே
இளைப்புடன் வந்தாயே—புசித்திட வருவாயே. (என்)

**சிவகலை** :—அப்பா எங்கே?

**மருதவாணர்** :—வருகின்ருரம்மா, யாத்திரையெல்லாம் முடிந்துவிட்டது. இனி நான் அவசரமாகப் போகவேண்டும். அப்பா வந்தால் இதைக்கொடுங்கள்.

**சிவகலை**:—என்ன அவசரமப்பா! எல்லா உணவுகளும் சித்தஞ் செய்து வைத்திருக்கிறேன். கொஞ்சம் உண்டு பின் செல்லப்பா.

**மருதவாணர்**:—யான் செய்த பாக்கியம் (பலகாரம் கொடுக்கிருர். மருதவாணர் கொஞ்சம் புசித்துவிட்டு) அம்மா! இனி, தாமதிக்க முடியாது. அனேக நமஸ்காரம்.

திருவருள் விரைந்து ஓடிமறைகின்றது. சிவகலை யம்மையும், பின் நாடிச்சென்று காணாமல் திகைத்து யோசித்துக் கொண்டிருக்கிறார் திருவெண்காடர் மூட்டையோடு சிவகலையிடம் வந்து மருதவாணரை அழைக்கிறார்.

திருவெண்காடர்:—மருதவாணா! மருதவாணா!! மருதவாணா!!! (விரைந்து) மாதே! மருதவாணன் எங்கே! எங்கே!! (நாற்புறமும் சுற்றிப் பார்த்து) அந்தோ! எங்கு தேடியும் என்னருமை மைந்தனைக் காணேமே, பெண்ணே!

காபி—ரூபகம்.

பல்லவி.

எங்கே, எங்கே, எங்கே, என்கண்மணியும் (எங்)

அநுபல்லவி.

தங்க மருதவாணன், இங்கு வந்தவன் காணேன் (எங்)

சரணம்.

பசியென்று சொன்னனே பாலன் நன்றாய்ப்
புசித்திடச் செய்தாயோ சீலன்
அசைவின் மணி விளக்கென் அருமைத் தவசுதனும் (எங்

என்ன! ஏன்! மவுனஞ் சாதிக்கின்றாய். நடந்ததுதான் என்ன? குழந்தை வரவில்லையா?

சிவகலை:

சுருட்டி—ரூபகம்.

பல்லவி.

மனது கலங்க வேண்டாம் ஐயா,
மைந்தனிங்கு வந்தானையா (மனது)

அநுபல்லவி.

எனது உயிர்க்குயிரே உமது
எண்ணம்போலே செய்தேன் இனிது (மனது)

சரணம்.

அடியாள் நலமுடனே ஒன்று
அறைந்தேன் அன்னம்புசித்தான் நன்று
பிடிவாதமாய் போறேனென்று
புகன்றுவிட்டு அகன்றானின்று (மனது)

பிராணபதி! கண்மணி மருதவாணன் இவ்விடம் வந்து யாத்திரை முடிந்துவிட்டதென்றும், வெகு அவசரமாக அப்போதே போகவேண்டு மென்றும், தொந்தரவு செய்தான். யான் பல இனிய வசனங்களால், அவன் மனதை இளகச்செய்து, சகலமும் உண்ணும்படி செய்வித்தேன். சற்றுநேரமிருந்து, இப்பெட்டியை என்னிடந் தந்து தங்களிடம் கொடுக்கும்படி தெரிவித்து, சரேலென்று போய் விட்டான். யானும் விரைந்து பின் சென்றேன். என் கண்களுக்கு உருவம்புலப்படாது மறைந்தது. ஒன்றுந் தோன்றாது தியங்கிச் சிந்தித்திருக்குந்தருணம். தாங்களும் வந்து விட்டீர்கள், இதுதான் நடந்தது.

திருவெண்காடர் :—அப்படியா! (பெட்டியைக் கையிற்பெற்றுக் கொண்டு) இந்தப் பெட்டிதானா மருதப்பன் கொடுத்தது.

சிவகலை :—ஆம், நாதா.

திருவெண்காடர் பெட்டியைத் திறந்து ஓலைச்சுருளையும் காதற்ற ஊசியையும் நூற் சரடையும் காண்கிறார்.

ஆ-ஹா! (சற்று யோசித்து) என்னை யாட்கொள்ள வந்த அப்பனே! என்ன, கபடமாய் வஞ்சித்துவிட் டகன்றாய். (தலையை யசைத்துவிட்டு)

விருத்தம்.

சூதற்ற கொங்கையும் மாஞர் கலவியும் சூழ்பொருளும்
போதுற்ற பூசலுக்கென் செய்யலாம் செய்த புண்ணியத்தால்
தீதற்ற மன்னவன் சிந்தையினின்று தெளிவதற்கோ
காதற்ற ஊசியைத் தந்து விட்டானென்றன் கைதனிலே.

(பெருமூச்சுடன்) ஆ - சிவனே - சிவனே! (தலையை அசைத்து விட்டு) எம்மை சோதிப்பதற்கோ இவ்விதத் திருவிளையாடலெல்லாஞ் செய்தாய்! "காதற்ற ஊசியும் வாராது காணுங்கடை வழிக்கே" என்று எழுதி வைத்தது மன்றி, இச்சீட்டும், ஊசியும், உடன் வைத்தது எதற்கோ? ......ஓ ஓ, இப்புவன போகம் காதற்ற ஊசியென்றும் அதனுலெழும் இன்பம் இந்நூற் சரடென்றும் விளக்குவதற்கோ, திருவே! இதை உன்னருமை வாயிஞற் சொல்லி இருந்தால் பெரும்பதம் பெறுவேனே. ஏனுே என்னை இவ்விதஞ் சோதிக்க மனத்திடங் கொண்டாய்? (சற்று யோசித்து) அப்பனே! உணர்ந்தேன், உணர்ந்தேன். தடுத்தாட் கொள்ளுந் தயாநிதி என்பது உமக்கே தகும். பரம்பொருளே! பிறவிப்பெருந்துயர் போக்கிட உகந்து, கருணைக் குழந்தையாய்க் கனிவுடன் வந்து, காதற்ற ஊசியைக் கையினிற்றந்து, துறவறமென்னும் நெறிதனைநாட்டி, கரையேறும் வழியைக்காட்டிய தேவே! என் உடல் பொருளாவி மூன்றினையும், உனக்கே யுரிமையாக்கிவிட்டேன். இனி இந்த வாழ்க்கையை விரும்பேன். (சற்றுத் தாமதித்து) பொய், பொய், வேண்டாம் வேண்டாம். (மனைவியைப் பார்த்து) பெண்ணே! இனி உன்னுேடிருந்து வாழ்தல் அருவருப்பானது. ஆகவே என்னை இந்நிலையிலேயே விட்டு, உன் தாய் வீடு சேர்ந்து, சுகமாய்க் காலங்கழித்திரு.

ஓட்டம்பிடிக்க ஆரம்பிக்கிறுர். மனைவி இரு பாதங்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு போகவேண்டா மென்று தடுக்கிறுர்.

சிவகலை:—நாதா! அடியாள் தங்களுக்குச் செய்த குற்றமெதுவோ?.........மறுமொழியுஞ் சொல்லாது மவுனஞ் சாதிக்கின்றீரே. நாதா! தங்களுடைய வார்த்தையைத்தடுத்துரைப்பதாக எண்ணவேண்டாம். மன்னிக்கவேண்டும். திடீலென்று என்னைவெறுக்க வந்தது என்ன காரணமோ! "ஏறுமாறாக இருப்பாளே யாமாயின் கூறாமற் சந்நியாசங் கொள்." என்றபடி அப்படிக்கேதேனும் நிகழ்ந்ததா? ஒன்றுமில்லையே. ஒரு பிழையுஞ் செய்தறியாத என்னைத் தாங்கள் தாய்வீடு போகச்சொல்வது தருமமோ! யாவரும் அறிய அங்கிசான்றாய்க் கைப்பிடித்த நாயகனே தனக்கு வழிபடு தெய்வமாகக் கருதி, அவன் வேறு தான் வேறு என்ற விகற்ப உணர்ச்சி சிறிதுமில்லாமல் அவனோடு இன்பதுன்பத்திற்கிசைந்து வாழும் மாதையன்றோ கற்புடையாள் என்று விண்ணும், மண்ணும், உவந்து கொண்டாடுவது. தாங்கள் என்னை விட்டுப்பிரிந்தால், பின் யாரை யான் தெய்வமாகப் பணிந்து இன்புறுவது பிராணபதி.

தேசிகம்—சாப்பு.

பல்லவி.

என்ன பிழை செய்தேனையா
மன்னவரே சொல்லும் மெய்யா (என்)

அநுபல்லவி.

சொன்ன மொழி சிரமேற் கொண்டு
சோர்விலாது செய்தேன் தொண்டு (என்)

சரணம்.

குல மகட்கினிய தெய்வம்
கொழுநனன்றி வேறுமுண்டோ
உலகிலனுரும் இன்ப துன்பம்
ஒன்றதாகக் கொள்வாரன்றோ (என்)

நாயகமே உம்மைவிட்டு
நான் பிரிதல் நியாயமோ
தாயுந் தந்தையாவும் நீரே
தனிவிடுதல் தருமமோ (என்)

பிராணேசா! என்னைத் தாய்வீடு போகும்படி சொல்வது எதற்கு! அன்றே அகில தேவர்களறிய உமக்கே யுரிமையாக்கிச் சென்றனரே. அன்றுமுதல் யான் உமக்கு உரிமை நாயகியாகவும், தாமெனக்கு உரிமை நாயகராகவும், நகமும் தசையும் போலும், உயிரும் உடலும் போலும், என்றும் பிரியாது உலகில் வாழ்ந்து வந்தோமே! திடீலென்று என்னைத்தனிமை யாக்க எத்தனஞ் செய்தல் நன்றோ? பகுத்தறிவற்ற விலங்கினங்களும், பறவைகளும், தத்தம் கூட்டுறவை விட்டுப் பிரிந்து வாழ்கின்றனவா? மனிதப் பிறப்பில் மாட்சிமைபெற்ற தம்மைப் பிரிந்து எப்படி யான் தனியே உயிர் வாழ்வேன்! பெண்களுக்குக் கைநிறைந்தபொருளைப் பார்க்கினும் கண்ணிறைந்த புருஷனேமேல் என்பது தாங்களறியாததோ? ஆகவே உமக்கென்று உரிமையான யான் உம்முடனே வருகின்றேன்.

திருவெண்காடர் :—பேதாய், நீ எதுக்கு என்னுடன் வருவது?

தேசிகம்—ஆதி.

அவரவர் வினைப்படி அவரவர் வருவார்
அவரவர் போவார் அறியாயோ
பவமெனைத் தொடரும் படி வர வேண்டாம்
பாவையே போவாயே

சிவகலை :—

உத்தமரே உமது உரிமை இத்தேகம்
உம்மைவிட் டுடல மசையாதே
எத்துயர் வரினும் இணை பிரிந்திடவே
என் மனமணுவும் இசையாதே

**திருவெண்காடர்:—**

மணமது கொண்ட மன்னவன் சொற்படி
மருவீடு மங்கையை நவமாக
கணவனுக் கினியாள் கற்புடையாளெனுங்
கவிஞர்கள் புகழ்வா ருயர்வாக

பெண்பாவாய்! உள்ளத்திலுறையும் உண்மை நாயகனை மறந்து என்னை நாயகனென்று பின்பற்றுவது எதற்கோ? பேதாய், எண்ணிப் பார்.

விருத்தம்.

உற்றாரார் பெற்றாரா ருடன்பிறப்பார் பிள்ளைகளார்
மற்று ரிருந்தாலென் மாளும்போ துதவுவரோ
கற்று விழுந்தவிளங் கன்றதுபோ லேயுருகிச்
சிற்றுகிச் சிற்றின்பஞ் சேர்ந்தனையே நெஞ்சமே

பெண்பாவாய்! பெற்றவர்யாவர்? கூடப்பிறந்தவர் யாவர்? பிள்ளைகள் யாவர்? உற்றாரும் உறவினரும் இன்னு மற்றவரு மிருந்தென்ன? மரணகாலத்தில் வந்துதவுவார் களோ? நீரிற்குமிழிபோல் மறையும், பொய்ப்போகத்தைப் பெரிதாக வெண்ணி, தாயைப்பிரிந்த கன்றுபோல் தயங் குகின்றனையே எதற்கு? நித்தியமும், அழிவில்லாததும், அணுவுக்கணுவுமாயிருக்கும் சுத்த சைதன்யமாகிய பரம் பொருளின் ஆணைவழி நிற்பவனுய் விட்டேன். ஆகவே இனி யிந்த யாக்கை யழியினும் உனது சேர்க்கையைவிரும் பேன். "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" யென்ற வசனத்தைச் சிரமாகக் கொண்டு என்சொற்படி நெறி யோடு உன் தாய்வீடு சேர்ந்து அல்லும் பகலும் அகநாய கனை மறவாது பூசித்துக்கொண்டிரு. நற்கதி பெறுவாய். அன்றேல், கற்பின் நெறியைக் கடந்தவளே யாவாய்.

**சிவகலை:**—ஆ தெய்வமே! (மரம்போல் சாய்ந்து)

கவி.

பெண்ணெனப்பிறந்தபாவி
புருஷனை யிழந்தபாவி
மண்ணிலே கொடியபாவி
மாபாவியா னேன்ருனே.

(மூர்ச்சை யடைகிருர்.)

திருவெண்காடர் :—ஆ சிவமே பிழைத்தேன்! பிழைத்தேன்!! என்னையாட் கொள்ள வந்த குருநாதா, நெருப்பிற் பட்ட கற்பூரம்போல் உனது திருவிழி நோக்கத்தால் பாசபந்தமாகிய வினையானது எரிந்தது. உனதன்பால் எல்லா உண்மைகளுந் தெரிந்தது. இனி யென்றும் உன்னையே துதிக்க உள்ளத்தில் அன்பு பிறந்தது. அனேக காலஞ் சென்றது. கர்மானுபவ வினைகளனைத்துங் கழிந்தது. பிறப்பிறப் பென்னுமிரண்டும் இருப்பிடமில்லா தொழிந்தது. தெளிந்தேன். திருவடியே கதி யெனத் துறவறங்கொண்டேன். இதோ செல்கின்றேன்.

சகலமுங் களைந்து விட்டு ஏக வஸ்திரத் தோடு நின்று.

விருத்தம்.

விட்டே னுலகம் விரும்பே னிருவினை வீணருடன்
கிட்டே னவருரை கேட்டு மிரேன்மெய் கெடாதநிலை
தொட்டேன் சுகதுக்க மற்றுவிட்டேன் ருெல்லைநான் மறைக்கு
மெட்டே னெனும்பர மென்னிடத் தேவந்திங் கெய்தியதே

(சரேலென்று திரும்புகிருர்)

ஞானகலாம்பை கையில் தடிக்கோல் பிடித்துக் கொண்டு தலையை யசைத்த வண்ணமாக வந்து திருவெண்காடரைப் பார்த்து வருந்துகிருர். சேர்தனும் விரைந்துவந்து நமஸ்கரிக்கிருர்.

ஞானகலாம்பை :—அப்பா திருவெண்காடா! இதுவென்ன கோலமப்பா! விருத்தாப்பிய மடைந்திருக்கு மென்னை

விட்டுத் துறவறம் செல்லத் துணிந்து விட்டனையே. என்னை எவர் காப்பாற்றுவாரென்று விட்டுச் செல்கின்றா யப்பா! இன்றோ நாளைக்கோ என்றிருக்கின்றேனே! இந்த சமயத்தில் எனக்கு ஒன்றுஞ் சொல்லாமல் ஓடுகின்றனையே! ஒருகால் யான் உயிரிழப்பேனாகில் புத்திரனாகிய நீ இருந்தால் அன்றோ! செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்து பெரும்பதம் சேர்ப்பிப்பாய். அன்றேல் திக்கில்லாத பிணமாவேனே! இதுஉனக்குத் தருமமா! எனது ஈமகடனை முடித்து ஏகுவாயப்பா.

திருவெண்காடர்:—(அன்போடு)

நாதநாமக்கிரியை அடதாளம்

பல்லவி.

தாயே உன்மனமது தளர்வதுகொண்டு
தயங்குவதேனம்மா (தாயே)

அநுபல்லவி.

சேயேனானை யன்சொல்வழி நின்றேன்
சோர்வடைவதேன் சும்மா—உயர்
பேற்பெறும் சிரம்பா (தாயே)

சரணம்.

இன்பவீடெய்திட எண்ணமதற்றோர்
துன்பமார்ருலகில் அன்புகொள்வாரோ
எம்பிரான் இணையடியெனக்கருஞ் செல்வம்
தம்பிரான் தாள்பூண்டேன்—இனி
உம்பர்வாழ்வும் வேண்டேன் (தாயே)

அம்மா வருந்துவதேதுக்கு, உமது பெருந்தவப்பயனாக வந்தபேறிதுவாகும், "பண்ணிய பயிரிற் புண்ணியந்தெரியும் என்ற மூதாட்டியார் அரிய வசனமே அத்தாட்சியாகும். அம்மா! ஒப்பற்ற உயர் நிலையைப் பெறுவதற்கு அப்பன் செப்பிய நிலையில் நிற்பவனாய் விட்டேன். இனியெப்பொருளும் வேண்டி ஒப்புறவாழ விசையேன்.

வருந்துதலை விட்டு விடுங்கள். உமது எண்ணம்போல் எனது கடமையை நிறைவேற்றுவேன். (சேந்தனுரைப் பார்த்து) சேந்தனுரே? நமது பொருள்களை யெல்லாம், எல்லோரு மடையும்படி சூறையிட்டுவிடும். இதுவே எமது கட்டளை.

ஞானகலாம்பை :—செல்வா! எல்லாவற்றையும் சூறை இட்டு விடும்படியாகக் கட்டளை செய்து விட்டனையே. பின்பு நீ எங்கு இருப்பாய், எவ்விடம் புசிப்பாய், எந்த இடத்தில் உறங்குவாய், திருவெண்காடா! தீர்க்காலோசித்துச்செய் யப்பா.

திருவெண்காடர்:—யோசனையா? அம்மா

விருத்தம்.

பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை பிறந்து மண்மே
லிறக்கும்பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்தந்ததென்று கொடுக்கறியா
* திறக்குங் குலாமருக் கென்சொல்லுவேன் கச்சி யேகம்பனே.

பெற்ற தாயே! நமக்கு இந்தச் செல்வம் எப்போது வந்ததென்று தாங்களே யோசித்துப் பாருங்கள். குருலிங்க ஜங்கமபூசை நிறை வேற்று வதற்கே சக்தியற்றிருந்த நமக்குத்திருவருட்கடாட்சத்தால் வந்துற்றதென்று தமது திருவுளமே அறியும். பிறக்கும் பொழுது உடன் வந்ததா? அல்லது போகும் பொழுது உடன் கொண்டுபோகக்கூடியதா? இடையில் வந்து, இடையில் அழியும் இயல்புடையது. அத்தகைய அற்பபோகத்துக் காசைப்படுவது, மானுடராகப் பிறந்த நமக்கு மாண்புடையதோ? அம்மா! இப்பிறப்பில் நாமடைய வேண்டிய முக்கிய அம்ஸங்கள் இரண்டுள்ளன. இம்மைக்கு ஜீவபோகமும், மறுமைக்கு சிவபோகமுமே யாம். ஜீவ போகத்திற்கு வேண்டிய அன்னமுதலியவைகள் கொடுக்க நாடு இருக்கின்றது. ஒப்பற்ற சிவபோகத்தை ஒருமனமாக இருந்

---

இதற்கேற்ப கீழ்க்கண்டவிதம் பாடவேண்டும்.

* திறக்கும் அறிவிலாற் கென்பயனுகுமென் எழிலன்னையே.

தனுபவிக்கக் காடு இருக்கின்றது. எத்தனை நாளைக்கு பத்திரப்படுத்தி வைத்திருந்தாலும் ஒருநாளைக்கு ஒழியப் போவதென்னமோ உண்மை. அது இன்றே ஒழிந்து போகட்டுமே. அம்மா! அதனால் உமது பெருமைக்குக் குறை வுண்டோ?

ஞானகலாம்பை :—அப்பா, பெருமையும், சிறுமையும், பேசுவதற்கு யானிங்கு வரவில்லை. காடுவாவென்ற காலத்திலே எனக் கேனிந்தப்பாடு. எல்லாம் உனக்கு உரிமையானது, உன்னிஷ்டம் போல் செய்துகொள்.

திருவெண்காடர்:—அம்மா, தங்களுடைய வார்த்தையைத்தடுத்துரைப்பதாகக் கொள்ளவேண்டாம். பலருக்கும் பயன் படச் சூறையிடும்படியாக யான் கட்டளையிட்டிருக்கும் பொருள்களோ, இந்த தேகயாத்திரையின் காரணமாக வந்து, சிலகாலமிருந்து, ஒழிந்துபோகும் பொய்ப் பொருளாகும். அது தெரிந்தும் மறுபடியும் அதனையே சிந்திப்பது எதற்கோ? பொய்யைப் புகழாகக் கொள்வது பிறவிக்கிடமன்றோ? மெய்ப்பொருளாகியும், என்றும் அழிவில்லாததுமாகிய பரம் பொருளையே அனுபவிக்க இச்சையுற்றேன். காட்டைச் சேரப்போகும் உமக்கு நாட்டைப்பற்றிக் கவலையேன்? இவ்வுலகையும், உலகப் பொருள்களையும் கக்கியசாத மெனக்கருதி கண்ணுதற் பெருமான் கழலிணை மறவாது தியானித்துக் கொண்டிருங்கள். அதனால் இன்பவீடெய்தும்.

ஞானகலாம்பை :—திருவெண்காடா! போகட்டுமா!

திருவெண்காடர் :—அம்மா! அப்படியே செய்யுங்கள்.

விருத்தம்.

உண்டதே வுண்டு முடுத்ததே யுடுத்து
மடுத்தடுத் துரைத்ததே யுரைத்தும்
கண்டதே கண்டுங் கேட்டதே கேட்டுங்
கழிந்தன கடவாளெல்லாம்

-600 008.
148069
O-2MK58,
M19

விண்டதாமரைமே லன்னம் வீற்றிருக்கும்
விழவறு வீதிவெண்காடா
அண்டரே போற்ற வம்பலத்தாடு
மையனே யுய்யுமா றருளே.

திருவெண்காடர் :—(ஒருபுறமாகவிருந்து) சிவமே! போதும், போதும், வீண்காலங் கழித்தேன்: வீணுக்கே உழைத்தேன். விழித்தேன். பந்தமனைத்துமொழித்தேன், களித்தேன்.........(தலையசைத்தவண்ணமாக) நல்ல மனமே! ஏன் அல்லற்படுகிறாய்?

கட்டளைக் கலித்துறை.

வீடு நமக்குத் திருவாலங் காடு விமலர்தந்த
ஓடு நமக்குண்டு வற்றாத பாத்திர மோங்கு செல்வ
நாடு நமக்குண்டு கேட்டதெல் லாந்தர நன்னெஞ்சமே
யீடு நமக்குச் சொலவோ வொருவரு மீங்கிலையே.

அல்லலற்று ஆநந்தமாக விருக்க நல்ல வீடு திருவாலங்காடும், பசித்தால் இரந்துண்ணத் திருவோடும், இல்லையென்று சொல்லாமற் கொடுக்க இந் நாடும், நலமுற்றிருக்க, ஏன் பாடுபடுகிறாய். மூடமனமே! உன் கொடுங்குணத்தை ஏனோ இன்னும் மாற்றாதிருக்கின்றனை? ஏமன் பிடரியின்மேல் காத்துக் கொண்டிருக்கின்றானே. பேதையே! நாறுமுடலுக்கு நல்லழகோ! பாசக்கயிறிருக்கப் பரிகாரச் சின்னங்களோ! ஊசல் மனமே! மூவாசையுள்ளவர்கள் முத்திப்பதமடையார்களென்றும், அது ஒழித்தவர்களே நல்லுணர்வுடையவர்களென்றும் பல முறையும் உனக்குச் சொல்லி இருக்கின்றேனே. முன்செய்த பாவ புண்ணியத்திற் கீடாக வெடுத்த தேகமிது. ஜீவன் அகலுமேயாயின் மரம்போல் சாய்ந்து மண்ணுக்கோ அல்லது தீக்கோ இரையாகப் போகக்கூடியது. கடத்திற்கு மண் எப்படி காரணமோ, அதுபோல் அஸ்திபாதி, பிரியம், நாமரூபமுங்கூடி பஞ்சேந்திரியங்கள் ஆதாரவைக்கொண்டு வினையுள்ளளவுஞ் சஞ்சரிக்குந் தகைமையுடையது. வினையொழிந்தால் தினைப்போதளவும் நில்லாது மறுபிறவிக்

காளாய்விடும். ஆகவே மீண்டும் பிறவிக்காளாகாது இறைவன் திருவருளேயே திறமாகப்பற்றி உய்வாயாக.

கட்டளைக் கலித்துறை.

மனையாளும் மக்களும் வாழ்வுந் தனமும் தன்வாசன்மட்டே
இனமான சுற்றம் மயானமட் டேவழிக் கேதுதுணை
தினையா மளவெள் ளளவா கினுமுன்பு செய்ததவந்
தனையாள வென்றும் பரலோகஞ் சித்திக்கும் சத்தியமே.

[பட்டினத்து வாசிகள், அம்பூதி, அமரேசன், சம்பு பானுமதி பாண்டியன், திருவெண்காடர் முன் வந்து நின்று]

பாண்டியன்:—ஐயா உமது செல்வ மென்ன! சிறப்பென்ன! வீடென்ன! வாசலென்ன! வர்த்தகமென்ன! உமது உதவியால் எத்தனேயோ ஏழைகள் பிழைத்து வந்தார்கள். பரதேசிக் கோலங்கொண்டு பட்டினத்தை விட்டுப் பராமுகமாகப் போகின்றீரே! உம்மை நம்பி இருந்த எங்களுக்கு இனி என்ன கதி? (திருவெண்காடர் ஒன்றும் பேசாது போய்விடுகிறார்.)

அம்பூதி:—(பெருமூச்சுடன்) அடடா! பானுமதி, திருவெண்காடனைப்பார்த்தையா? நம்போ என்ன சொல்லியும் கேக்காது போய்விட்டா.

பானுமதி:—போடா! நல்லா வாழ்ந்தா! இப்போ வாணுயெண்ணுபோரா. அவனே என்ன செய்ருது.

சம்பு:—(சிரித்துவிட்டு) அம்பு உங்களுக்கு மசிவானடா அவே. பலே பலே சாமிகளே யெல்லாம் பார்த்த கையிடா இது. (கட்டைகாப்பைக் காட்டி) அல்லா ஒட்டுமேலே தானேடா லட்டுமிட்டாய். இது தெரியாதா!

பானுமதி:—போடா போடா பொரிக்கியெடுத்த முண்டமே. போர் போரானே. பொன்னை யெல்லாஞ் சூரையிட்டு, போரானே கட்டகாப்புக்கா மயங்குவா போடா போடா போலே.

சம்பு:—ஆனு நீ சொல்லெண்டா நம்ப குலத்துக்குபெரியமான மாக இருக்குதடா இது.

பானுமதி:—சொல்றதா! வானஞ்சுருங்குனு தானே சுருங்குது! இது தெரியாதா, எப்படியு அவே பிச்சைக்கு வருவா யாரும் போடகூடா தெண்ணு ஒரே கச்சை கட்டினு அப்போ தொங்கரு. தொறந்தது கிறந்ததுயெல்லாபறந்து போவுது தானெ வழிக்குவார.

சம்பு:—பேஷ், பேஷ் இப்போ சரி.

பானுமதி:—ரொம்ப சரி.

அம்பூதி:—அல்லா சரி வாங்கோ வாங்கோ அக்கா ஊட்டுக்கு போயி தக்கபடிசெய்யலா

---

## அங்கம் 3. காட்சி IV.

இடம்:—திருவெண்காடர் தமக்கை இல்லம்
காலம்:—மாலை
நடர்:—திருவெண்காடர், மீனாட்சி

மீனாட்சி:—(திருவெண்காடரை நோக்கி) அண்ணா! வாருங்கள், வாருங்கள் அதிக பசிபோல் காண்கிறது. இந்த அப்பத்தைப் புசித்து இளைப்பாறுங்கள்.

[திருவெண்காடர் அதை வாங்கிப் பார்த்து நகைத்து]

திருவெண்காடர்:—நன்று! நன்று!! (தலையசைத்துவிட்டு)

### வெண்பா.

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணுக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கேன்
என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
அன்பில்லா ளிட்ட வமுது

ஆ-ஹா உலகவிசிதமிது, பேதைமனமே! உடன் பிறந்தார் சுற்றத்தாரென்றிருக்க வேண்டாம் உடன்பிறந்தே கொல்லும் வியாதி என்ற வாக்கியத்தை யுன்னாது அடிக்கடி என் தாய், என் தந்தை, என் மைந்தர், என் தமக்கை என்று இறுமாப்படைகின்றனையே! இப்போது என்ன சொல்லப்போகின்றாய்! கொடியது, கொடியது!

### வருத்தம்.

தாயும் பகைகொண்டபெண்டீர் பெரும்பகை தன்னுடைய
சேயும் பகையுற வோரும் பகைபிச் செகமும்பகை
யாயும் பொழுதலருஞ் செல்வநீங்கி லாதலினாற்
றேயும்நெஞ் சேமரு தீசர்பொற் பாதம் சுதந்தரமே.

ஓ, மனமே! ஒப்பற்ற பரம்பொருளே உனக்குற்ற துணையாகும். மற்றவெல்லாம் கனவொக்குமென மதி. (திருவருள் சிந்தனையாக) முழுமுதற் கடவுளே! எல்லாம் நீயறிவாய். உன்னருளால் யான் அறிந்தேன் (தமக்கையைப் பார்த்து) வஞ்சகி! கொஞ்சமேனும் அஞ்சாது நஞ்சுகலந்த அப்பத்தைப்புசித்திடத்தந்தனையல்லவா? பஞ்சமாபாதகி! அதை இதோவைத்தேன். (வீட்டின் கூரையின்மேல் வைத்துவிட்டு.)

### கவி.

"தன்வினை தன்னைச் சுடும்
ஒட்டப்பம் வீட்டைச் சுடும்"

(தமக்கைவீடு தீப்பற்றிக் கொள்கிறது.)

திருவெண்காடர் :—(தனிமையில்) முடிந்தது, முடிந்தது. இனி குடி இருந்த வீட்டிற்குக் கொள்ளிவைக்க வேண்டும்.

(விரைந்து செல்கிறார்.)

## அங்கம் 3. காட்சி V.

இடம் :—மயானம்.

காலம் :—இரவு

நடர் :—திருவெண்காடர், அவர் பந்துக்கள் முதலியோர்.

[சிவலோக பதமடைந்த ஞானகலாம்பையை மா போர் யாவரும் மயானத்திற்கு தகனஞ்செய்யக் கொண்டு வருகிறார்கள். அதனைத்திருவருளால் திருவெண்காடர் உணர்ந்து ஓடிவந்து அவர்களை விலக்கித்தாம் தகனஞ் செய்யத் திருவருளைப் பிரார்த்திக்கின்றார்]

திருவெண்காடர்:—(தாயை நோக்கி) ஆ, என்னைப்பெற்ற தாயே வந்தேன். வந்தேன். அம்மா முடிந்ததா இல்வாழ்க்கை. (வாடிய முகத்தோடு.)

வெண்பா.

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்து—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தானை
யெப்பிறப்பிற் காண் பேனினி.

(மனவருத்தத்துடன்)

அம்மா! பலநாள் தவஞ்செய்து, விரதங்கள் பல காத்து, அருமருந்துபோல் வருந்தி என்னைப் பெற்ற அன்னாய்! கட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும் இட்டமுடன் வைத்தென்னை வளர்த்தனையே! காவென் றழுதால் வாவென்றெடுத்து வண்ணப்பால் தந்தனையே! சிறியழுதால் சிராட்டிப் பாராட்டிச் சிற்றுண்டி ஊட்டி னையே! அந்நாள் செய்த வெல்லாம் இந்நாள் மறந்த னையோ! பெற்ற மகனை வளர்க்கும் அரியசெயலை மறந்து, துரியமுங் கடந்த சுயஞ்சோதியில் ஒன்றாய்ச் சேர்ந்து கலந்தனையோ! என்னை மறந்தனையோ! நீ விரும்பிய வாறே விமலனருளால் பிறந்த கடன்மையை மறவாது செய்ய மனமிசைந்தேன்.

[தகனஞ் செய்வதற்கு வாழைமட்டைகளை வரிசையாக வடுக்கிவிட்டு, அம்மையார் திருமுகம் நோக்கி சற்று வருந்தி நின்று, பிறகு]

தாயே! இருந்தார்க்கும், துறந்தார்க்கும் தாயே தலை என்பர். ஆதலின், உமது திருப்பாதக் கமலங்களுக்குத் தனயன் இதோ நமஸ்கரிக்கின்றேன். திருவருட் கடாட்சத்தால், தாங்கள் திருவாய் மலர்ந்தருளிய பிரார்த்தனையைச் சிறியேன் இன்று முடிக்கின்றேன்.

[கையில் வாய்க்கரிசியை வைத்துக்கொண்டு மெய்வருந்தியவராய்.]

வெண்பா.

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்—மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு.

தேனே அமுதமே செல்வத்திரவியமே பூமானே யென்றழைத்த மலர்வாய்க்கு இதோ வாய்க்கரிசி யிட்டேன். இனி, தகனஞ் செய்யவேண்டிய தொன்றுளது.

(மறுபடியும் தாய் சோகத்தால்)

அம்மா! இனி நின்னுடலை நெருப்பிற்கு இரையாக்க வேண்டுமே. அந்தோ! பல வுணவுகளையும் ஊட்டிய கைகளையும், நிலையுடன் சுமந்த தோள்களையும் அங்கிக் கிரையாக்க ஆருயிர் துணியவில்லையே. விலையில்லாமாணிக்கமே, என் செய்வேன். என் செய்வேன், (தனிமையில்) "முன்னுரை கடப்பது முறையன்று" அம்மா, கடமையைநிறைவேற்றுகிறேன்.

### கலி விருத்தம்.

முன்னை யிட்டதீ முப்புரத்திலே
பின்னை யிட்டதீ தென்னிலங்கையி
லன்னை யிட்டதீ யடிவயிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே,

[ஞானக்கினியால் திகிலென்று பற்றி யெரிகின்றது. அடிகள் கைகுவித்து தியான கோலமாக நிற்கிறார்.]

### வெண்பா.

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ வென்னை மறந்தாளோ—சந்ததமும்
உன்னையே நோக்கி யுகந்து வரங்கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய்

[செய்யவேண்டிய கிரியைகளை முடித்து விட்டு திருவருளைச் சிந்தித்த வண்ணமாக, திரும்பி விடுகிறார்.]

## அங்கம் 4. காட்சி I.

இடம் :—கொங்குநாடு.

காலம் :—முன்னிரவு.

நடர் :—திருவெண்காடர், தோப்பாசாமி, நல்லண்ணன்.

[திருவெண்காடர் மவுன நிலையுற்றிருக்குந் தருணம், பசியதிகரித் தமையால் பலியேற்றுப் புசிக்கத் திருவுளங்கொண்டு போந்த வீதியில் எல்லா வீடுகளும் மூடப்பட்டு ஒரு வீடு மாத்திரம் திறந்திருப்பதுகண்டு ஜன்னல் வழியே நோக்குவாராயினர். அவ்வில்லத்து மூர்க்கன் விரைந்தோடிவந்து கள்ள னென்று நன்றாய்ப் புடைக்கிறான்.]

தோப்பாசாமி :—அடி மாணிக்கோ! மாணிக்கோ!! எழுந்திரு திருடே, திருடே. (மூர்க்கன் விரைந்து வெளியேவந்து, இரு கைகளையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு) அடே திருட்டுப் பயலே! அண்ணிக்கி கொண்டுபோனது போதாது? இண்ணைக்கும் வந்தியோ? தடிப்பயலே விடமாட்டே. அண்டை வூட்டு அண்ணு! எதிர்வீட்டு ஆயாச்சி! வாங்கோ, வாஙகோ திருடே ஆப்பிட்டுகினு

[திண்ணையில் உறங்கியிருந்த நல்லண்ணன் திடுக்கிட்டெழுந்து, ஓடிவந்து.]

நல்லண்ணன் :—என்னடா! என்னடா!! தோப்பா! யார்ரா அது?

தோப்பாசாமி :—மின்னே காசிப் பொடவையே திருடிகினு போனுனே, அந்த கள்ளப்பயல்தா, இவ வேஷத்தே பாத்தீங்களா (தவடைமேல் ஒன்றுகொடுத்து) பாவி! உத்தம சன்

ணியாசிகள் பேரகெடுக்க உருவெடுத்து வந்தா. (ஓங்கி முதுகில் நாலடி யடித்துவிட்டு) இவ்வள, அடிச்சும் கத்றுண பாத்தீங்களா! அண்ணே இவ பழய கப்பி. இவ கெட்ட காலம் நம்ப கையிலே ஆப்பிட்டு விட்டா. இவனே கொட்டனெ போடாதே நிசத்தை சொல்லமாட்டா.

நல்லண்ணன் :—(முகத்தை யுற்றுப்பார்த்து) அடே! அடே! விடு விடு, (கையைப் பிடுங்கிவிட்டு) அடடா! பற்றற்ற பரம்பொருளாயிற்றே! பாதகா! என்ன மூர்க்கத்தனமாய் அடித்து விட்டாய்.

தோப்பாசாமி :—என்ன அண்ணே! ஒமக்கென்ன பைத்தியமா! ராக்கால மாச்சே உருப்படி தெரிலீயோ?

நல்லண்ணன் :—சீ, சீ, மூடா போடா (பட்டினத்தடிகளை நோக்கி இரக்கத்துடன்) சுவாமி! அதிதிகளுடைய அருமை தெரியாதவன். மூர்க்கத்தனமாகத் தேவரீர் திருவுளம் நோக இவ்விதஞ் செய்துவிட்டான். அடியேன்மேல் கிருபைவைத்து எனது மனைக்கு எழுந்தருள வேண்டும். (அடியார் தலையசைத்த வண்ணமாகப் பின்செல்கிறார்.)

## அங்கம் 4. காட்சி II.

இடம்:—திருத்தில்லை.
காலம்:—நண்பகல்
நடர்:—திருவெண்காடர், ஸ்ரீபார்வதிதேவியார்.

[திருவெண்காடர், பசியால் வருந்ினவராய், திருவருளைச் சிந்தித்து வருந்துகிறார்.]

பொன்னம்பலத்தரசே! இன்னும் மனம் இளகவில்லையோ! அப்பா, யான்செய்த பிழைதான் என்னே? கண்ணுதற் பொருளே! திருவிடை மருதூரில் யாரோ ஓர் சந்நியாசியைப்போல் திருவேடமுற்றுவந்து மருட்டியபோதும் உமது திருவிளையாட்டென்றே தேர்ந்திருந்தேன். மீண்டும் எனது கனவில்வந்து அரிய திருப்பாடலைப் பாடுகவென்று அனுக்ரஹித்தபோதும் அவ்வாறே திருவாரூர், மதுரை, திருவரும்பையூர், முருகன் பூண்டி முதலிய திவ்விய க்ஷேத்திரங்கள்தோறுஞ் சென்று திருப்பாடல்களைப் பாடினேன். கொங்குநாட்டில் பசியால் வருந்தி யாசிக்கப்போய் உடல் பதைக்க அடியும் பட்டேன் காய், கனிகளைத்தின்று கடும்பசியாற்றினேன். அதுவன்றியும் திருவானைக்காவல், திருக்காவேரிக்கரை, திருவையாறு, தஞ்சை, கும்பநகர், திருவாரூர் முதலிய க்ஷேத்திரங்களையுங்கடந்து, தேவரீர் திருத்தாண்டவஞ் செய்தருளிய திருத்தில்லைப்பதியில் இம்மரத்தடியில் தமது திருவடிகளே துணையெனக்கொண்டு வீற்றிருக்கின்றேன். அப்பனே! ஒப்பிலா மணியே! அன்பர் பொருட்டிரங்கும் அருள் நோக்கம் எங்கே பறந்து விட்டது. (தேவியையுன்னி) திரிபுரசுந்தரி, திரிபுராந்தகி! தேவி, நின்கருணை தானென்னே? யாசித்துப் புசிக்கட்டுமென்று யோசித்து இருக்கின்றீர்போலும்! முடியாது. முடியாது, கொங்குநாட்டில் பட்ட அடிபோதும். இனி எங்கும் போய் யாசிக்கமாட்டேன்.

வெண்பா.

இருக்கு மிடந்தேடி யென்பசிக்கே யன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனே என்றேகம்
இளைத்தாலும் போகே னினி.

இனி எது வரினும் வருக என்னையாளுடைய எம்பெருமான் இல்லை யெனில் யான் இவ்விதமே பசியினால் வருந்துவேன். அன்றேல் எவ்வாற்றேனும் அருந்துவேன். இது உண்மை

[ஸ்ரீபார்வதி அம்மையார் அடியாருக்குப் பொற்றட்டில் அமுது கொண்டுவந் தளிக்கிறார்.]

ஸ்ரீபார்வதி தேவி:—ஐயா! பெரியவரே, ஏன் வருந்துகின்றீர்? இவ்வன்னத்தையுண்டு அகமகிழும்.

திருவெண்காடர்:—(கையில் வாங்கி உண்டு உற்று நோக்கி யாரும் காணாமை திகைத்து.)

என்ன ஆச்சரியம், நமக்கு இப்போது அமுதளித்த அம்மையார் எங்கே! உருவெளித்தோற்றமோ? அன்று! அன்று!! பிரத்யட்சமாகவந்து அன்னமளிக்க வாங்கிப் புசித்தோமே (சுட்டுவிரலை நாசியின் மேல்வைத்து யோசித்து தலையையசைத்து விட்டு) உணர்ந்தேன்! உணர்ந்தேன்.

தந்யாசி—ரூபகம்.

பல்லவி.

சாம்பவி சங்கரி அன்னையே
சந்தேக மில்லை (சாம்)

அநுபல்லவி.

தேம் பொழில் சூழ் தில்லை மேவும்
தியாகராஜ தேவியே நீயே (சாம்)

சரணம்.

பாம்பணிந்த பரஞரித கௌரவி ஸ்ரீபார்வதியே
பூம்பதம் பணிவாருள்ளம்
புகழூரமகிழ் தருமாட்சி திகம்பரி தில்லை மீனாட்சி (சாம்)

மாதா! அண்ணலார் திருவுளப் பாங்கின்படி உகந்தன்ன மளித்தது தாங்களே சந்தேகமில்லை, நடராஜப்பிரபுவே! கொடுக்கின்றவனும், ஒன்றேடொன்ருய்த் தொடுக்கின்றவனும், பிரகிருதிச் செயலைத் தடுக்கின்றவனும், இருவினைப் பாசத்தைக் கெடுக்கின்றவனும், எல்லா உயிர்களுக்குந் தானுய் நடிக்கின்றவனும், நடராஜப்பிரபுவே யென்று இத்திருத்தில்லையில் தெளிவாய்க்கண்டேன், அண்ணலே! கோகர்ணம், மாகாளத்தி முதலிய திவ்விய க்ஷேத்திரங்களையும் தரிசிக்க மனமுற்றதால் அடிமைக் கென்றும் இணையடிகள் துணையாக விருக்கத் திருவருள் பாலிக்க வேண்டும் தயாநிதி!

## அங்கம் 4. காட்சி III

இடம் :—நந்தவனம்
காலம் :—இரவு (பூரணச்சந்திரன்)
நடர்:—பத்திரகிரியரசன், அவர்மனைவி, தோழி முதலியோர்.

[பூசா திரவியங்களுடன் பௌர்ணமி பூசை புரிவதற்கு வருகிறார்.]

பத்திரகிரியார் :—வனிதா ரத்தினமே, பூரணச்சந்திரப் பொலிவைப் பார்த்தனையா! தனது வலிய கிரணங்களால் தன்னை யடைந்த களங்கத்தையும் ஒளிபெறச்செய்து நிறைந்த காரிருளையும் போக்கி நிகரற்ற பிரகாசத்தைத் தருகின்றது. ரூபாவதி! இயற்கையழகினையுடைய உனது வதனத்தில் இப்பிரகாசம் பொருந்துதலைக் காணில் அழகுக்கு அழகுசெய்தது போலவே இருக்கின்றது.

இராஜசேகரி :—(நகம் சுளித்தவளாய்) என்ன, கேலியா செய்கின்றீர்! அழகுக்கு அழகு செய்வாருமுண்டோ? அழகில்லாத வஸ்துக்களை அழகு பெறச்செய்ய அழகுள்ள வஸ்துக்களால் அலங்கரிப்பது இயற்கை. அதுவிடுத்து இல்லனவற்றைக் கற்பித்து ஏளனஞ்செய்வது எதுக்கு?

பத்திரகிரியார் :—பெண்ணரசி! ஏன் அவசரப்படுகிறாய்? (தனிமையில்) அந்தோ என்ன பேதமை! எல்லா லட்சணங்களையும் அமையச்செய்த அந்தப் பிரமன் ஏனோ நல்ல குணத்தைக் கொடாது வஞ்சித்து விட்டான். மாதே! உபாதிபேதத்தால் சந்தர்ப்பமொட்டி சொன்னதே யன்றி உன்னை அழகில்லாதவளென்று சொன்னதன்று. பெண்களைப் பேதைகளென்று வழங்கும் உண்மையை இன்று உன்னால் உணர்ந்தேன்.

இராஜசேகரி :—(புன்னகையுடன்) நாதா! அடியாள் சொன்னது தவறே. (நமஸ்கரிக்கிறாள்) மன்னிக்கவேண்டும்.

பத்திரகிரியார் :—[நகைக்கிருர்.]

இராஜசேகரி :—பிரிய நாதா! ஒரு முக்கிய விடயம் அடியாள் உம்மிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று மனதிற் கொண்டுள்ளேன். அதைத் தெரிவிப்பதாக வாக்களித்தால் சொல்ல விசைகிறேன்.

பத்திரகிரியார் :—சுந்தரமே, என்ன விடயம்? சொல்.

இராஜசேகரி :—(சந்திரனைக்காட்டி) பிராணபதி! பூரணப் பிரகாசம், பொருந்தி விளங்கும் இச்சந்திர பிம்பம் நாளுக்கு நாள் தேய்வடையக் காரணமென்னே? தேவரீர் அடியாளுக்குத் தெரிவிக்கவேண்டும்.

பத்திரகிரியார் :—(நகைத்து) வனக்குயிலே! அதுவும் உன்போன்ற பெண்களால் விளைந்த குற்றமே. சொல்கின்றேன் கேள். சந்திரமூர்த்தியானவர் தக்ஷப்பிரஜாபதி திருக்குமாரத்திகளாகிய அசுவினி முதலிய இருபத்தேழுபெண்களையும் மணந்து, அவர்களில் கார்த்திகை உரோகணியாகிய இருவர்மேல் மாத்திரம் அதிக ஆசையும் அன்புங் கொண்டு, வர்த்தித்து வந்ததை மற்றைய இருபத்தைந்து பெண்களுங்கண்டு கலக்கமுற்று, அவர்கள் தந்தை தக்ஷப் பிரஜாபதிக்குப் பலமுறையும் சொல்லி கோபத்தைப் பெருகச் செய்ததாகவும், அன்னவன் அவர்கள் துர்ப்போதனையே பெரிதாகக்கொண்டு சிறிதும் யோசியாமல் சந்திரர்மேல் சினந்து நாளடைவில் தேய்ந்து மாண்டுவிடக் கடவதென்றும் சாபமிட்டதாகவும், சந்திரர் மிகவும் சிந்தை கலங்கி ஸ்ரீசோமசுந்தரப் பிரபுவை வேண்டினதாகவும், அப்பன் கருணையோடு எஞ்சிநின்ற அம்புலியின் கீற்றைத் தமது செஞ்சடையிற் சேர்த்து, அபயஸ்தங் கொடுத்து, பிராணபயத்தையும் ஒழித்து வளர்வதும் குறைவதுமாக விருக்க வனுக்கிரகஞ் செய்ததாகவும், அதுமுதல் குறைவதும் வளர்வதுமாக நேர்ந்ததென்றும் அறிஞர்கள் சொல்வார்கள்! பிரியே, இனித் தாமதிக்கப்படாது. விரைவிற் பூசைசெய்ய முடித்து விடுங்கள். அரண்மனைக்குப் போகலாம்.

இராஜசேகரி:—பிராணபதி! உலக விருளைப்போக்கி ஒப்பற்ற பிரகாசத்தைத் தரும் சந்திரமூர்த்திக்கே இவ்விதம் நிகழ்ந்த தென்றால் நாம் எம்மாத்திரம்! [சகியை நோக்கி] சகி! சிக்கிரம் பூசா திரவியங்களை யெல்லாங் கொண்டுவா.

[அரசன் மனைவியால் சகலபூஜா திரவியங்களையும் வைத்து கற்பூரதீபமிட்டு சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து பிரார்த்திக்கின்றான்.]

விருத்தம்.

அலைகட லதனினின்று அன்றவந் துதித்தபோது
கலைவளர் திங்களாகிக் கடவுளென் றெவருமேத்துஞ்
சிலைநுதல் உமையாள்பங்கன் செஞ்சடைப் பிறையாய்மேரு
மலைவலமாகவந்த மதியமே போற்றிபோற்றி.

பூரணச் சந்திரப் பிரபுவே! எனது கோரிக்கை சித்திபெறுமாறு அனுக்கிரகம் செய்யவேண்டும் தயாநிதி. (நமஸ்கரித்து மனைவியை நோக்கி) ஜாமவேளையாகிறது. யாவும்மியெடுத்துக்கொள். வாசஸ்தல பேகுவோம்.

இராஜசேகரி:— அப்படியே.

**அங்கம் 4.** **காட்சி IV.**

இடம்:—சிறுக்காட்டுப் பிள்ளையார் கோவில்.
காலம்:—நள்ளிருள்
நடர்:—பக்கா, முக்கால், கால், அரைக்கால்.

[திருடர்கள் விநாயகரைப் பிரார்த்தனை செய்து கொண்டு புறப்படுகிறார்கள்.]

நோட்—ஆதி.

**துக்கடா.**

ஜெயவீரா இந்த ஊருக்குள்ளே நம்மை
ஜெயித்திட யாராலாகுமடா

சிதறிட பதறிட கதறிடவே நாம்
செய்திடுவோம் மிகத் திடமாக

பயமிலாதெந்த வீட்டுக்குள்ளும் நாம்போ
பதுங்கியே கன்னம் வைப்போமடா

பக்குவ மிக்கவே தக்கபடி நாம்
சிக்கிடக் கொள்வோம் மிகவாக

இராஜாவீட்டு அரண்மனையில் விண்ணு
இராத்திரி கொள்ளையடிக்க வேணும் (ஜெய)

அரைக்கால்:—பேஷ் மாமா! இண்ணைக்கு நல்ல சகுனம் நாம் போ மலப்பா ஆப்புடு சந்தேகமே இல்லே.

பக்கா:—போடா நம்போ எப்போடா சொம்மாவந்தோ! இருந்தா பூனே பாஞ்சா புலிதானடா.

அரைக்கால்:—மாமா! என்ன ஆப்புடுதோ அப்பிக்கினு வந்திடுவே. முன்னே போலே பங்குகிங்கு வாணா. ஆராருக்கு என்ன என்ன ஆப்புடுதோ அவங்கசொத்து.

பக்கா:—அடே அரைக்கா வந்திடியே வழிக்கி. பலே' என்னடா அளக்கிறே. நா பழைய கப்பி இண்ணு ஒனக்குதெரியாதோ! யென்கிட்டவே மொழும்போட வந்திட்டியே நாகூட மடையிண்ணு பாத்திகினே. அடே முக்கா! பையே சொன்னதை பாத்தியா

முக்கால் :—அடே அரட்டல் அரைக்கா! என்னடா சுருட்டல் போட்டிரே! (பக்காவைப்பார்த்து) அண்ணு! இன்னு இவனுக்கு கன்னவைக்க கணக்கு தெரிஞ்சா கையிலே பிடிக்கக் கூடாது. அடே அரைக்கா! வூட்டு பூனே இண்ணு பாத்தினியோ இது காட்டு புலி தெரிஞ்சிக்கோ. என்னடா கால் சொல்லண்டா!

கால்:—அண்ணு! பழையகாலே தூக்காதிங்கோ, புதிய காலே தோண்டா திங்கோ. வழக்கம்போலே செய்யுங்கோ.

முக்கால் :—ஆமா! ஆமா!! அப்படித்தா ஏழு பங்கிபோடணு. பக்கா அண்ணுவுக்கு ரண்டுபங்கு, காட்டு புள்ளைக்கு ஒரு பங்கு, நம்போ நாலுபேருக்கு நாலுபங்கு, அதாவழக்க.

பக்கா:—அவ என்னமோ உளறுராண்டா.

கால் :—அவங்கெட்டா சோதா, மூஞ்ச சுத்தி கவாள எங்கேண்ணுவா ணு வழிக்கிவந்தா பாக்கிறது இல்லாவிட்டாபோடா போ இண்ணு ஓழிக்கிறது. வாங்கோ அண்ணு போலா.

[அனைவரும் அரண்மனையை நாடிப் போகிருர்கள்.]

---

அங்கம் 4. காட்சி V.

இடம் :—பத்திரகிரியரசன் அரண்மனே.

காலம் :—நள்ளிருள்

நடர் :—பக்கா, முக்கால், கால், அரைக்கால்.

[கள்வர், பத்திரகிரியரசன் அரண்மனையிற் புகுந்து களவாடுகிருர்கள்.]

மவுன நடிப்பு.

இக்களம் செய்கையாலும், அபினயத்தாலும், நடர்களுடைய சாமார்த்தியத்தால் நடைபெறவேண்டும் ஆதலால் நாடக உபாத்தியாயர் நடர்களுக்கு, சந்தர்ப்பத்தை யனுசரித்துக் கற்பிக்கவேண்டும்.

**அங்கம் 4** **காட்சி VI.**

இடம் :—சிறுக்காட்டுப் பிள்ளையார் கோவில்

காலம்.:—பின்னிரவு

நடர் :—பக்கா, முக்கா, கால், அரைக்கா.

[பட்டினத்தடிகள், பிள்ளையார்கோவிலில் நிஷ்டையில் இருக்குந்தருணம் அரசன் அரண்மனையிற் களவாடிச் செல்லுங் கள்வர், பிரார்த்தனைப்படி அடியாரை விநாயகரென்று எண்ணி கண்டசரமொன்றை அவர் கழுத்தி விட்டுச் செல்கின்றனர். ஆனல் தன்வசம்கெட்டுப் பரவசமுற்றிருக்கும், அடியாரதை யறியமாட்டார்.]

## அங்கம் 5. காட்சி I.

இடம்:—பத்திரகிரி அரண்மனைக்கடுத்த வீதி

காலம்:—காலை

நடர்:—விமலமூர்த்தி, வீரபத்ரன், சண்டமூர்த்தி, குண்டன்.

[பத்திரகிரியரசன் கட்டளைப்படி, விமலன் வீரபத்ரன், சண்டமூர்த்தி, குண்டன் முதலியோர் திருடர்களைப் பிடிப்பதற்குத் தக்கமுயற்சியோடு செல்கிறார்கள்.]

**விமலன்** :—அடே' சண்டைமூர்த்தி, குண்டா, வீரபத்ரா, இனி நாம் உயிர்தப்புவது அரிதென்று நினைக்கிறேன். நேற்றிரவு நடந்த கொடுஞ்செயலுக்காக அரசர் அதிக கோபமாக விருக்கின்றார். நாம் கண்விழித்துக் காவல் செய்து என்ன பயன்! களவுசெய்ய வந்தவர்களைக் கண்டு பிடிக்காமல் விட்டுவிட்டோமே! இனி அந்தக் கள்வரைக் கண்டுபிடிக்காவிட்டால் அரசர் நம்மைத் தண்டிப்பதாக ஆக்யாபித்துள்ளார். இனி என்ன செய்வதென்றும் தெரிகிலேன்.

**வீரபத்ரன்** :—அண்ணு, நீ ஒண்ணுக்கு அஞ்சாதண்ணு அந்த கள்ளகூட்டத்தாறு நம்போ சிறுங்காட்டு வழியேதா ஓட்டம்பிடித்து இருப்பாங்கோ. சந்தேக இல்லே. ஒரு கண்த்திலே பிடித்திடலா நீங்கோ மாத்திரம் அவுங்கோ காலு அடிகளே பாத்துகினே வாங்கோ.

**விமலன்** :—வீரபத்ரா! நீ சொல்வது சரிதான் ஆனல் மன்னர் வீட்டில் கன்னமிட வந்தவர்கள் என்ன சாமார்த்தியவான்களாய் இருப்பார்களென்று நீயே யோசி. ஆகவே நாமெல்லோரும் ஆயுதபாணிகளாகவே பேகவேணும், இன்னொன்று, என் கியாபகத்தில் வந்தது அவர்களனேகமாகப் பாழடைந்த கிணற்றிலும் பாழடைந்த கோவில்களிலுமே பதுக்கிவைப்பது வழக்கம். ஆகவே நாம் போகும் வழிகளில் புலப்படும் கிணறு, கோவில் முதலானவைகளையும், பரிசோதனை செய்து கொண்டேபோகவேணும்

**குண்டன்** :—அண்ணா ஒரு சந்தேகம்.

**வீரபத்ரன்** :—என்னடா எப்பவும் எதேசொன்னாலு சந்தேக சந்தேக இண்ணு தொந்தரவு செய்யிறே.

**குண்டன்**:—சந்தேகந்தீந்தா அல்லோ அண்ணா சாத்தியமாகும்.

**வீரபத்ரன்** :—நல்லபுத்தி ஒலக்கெகொழுந்துதா என்ன சந்தேக சொல்லு.

**குண்டன்** :—இது ஒரு பெரிய பட்டணம் அதிலு ராஜசமஸ் தானம் உம்மபோலே எத்தனே வீராதி வீரர்கள் காவல் செய்ற அரண்மனே இப்படி இருக்க வெளி திருடே வந்து இருப்பானா யென்றுதா சந்தேக.

**வீரபத்ரன்**:—சீ மூடப்பயலே, வாயைமூடு, வாய்கொழுப்பு. சீலெ யாலே வடிஞ்சதுபோலே ஆவபோவுது.

**சண்டமூர்த்தி**:—அடே அறிவுகெட்டவனே! அடக்குடாவாயே. சனப்பன் வீட்டுக் கோழித் தானே விலங்கிட்டுகினா போலே ஆவபோவுது. தவடே பொளந்துபூடும். அண்ணா இவ கிட்ட என்னண்ணா பேச்சி, வாங்கோ போகலா.

[சிறிது தூரம் நடந்து சண்டன் ஓடி வந்து காலடியை கவனித்து மற் றவர்களுக்குக் காட்டுகிறான்.]

**சண்டமூர்த்தி** :—அண்ணா! அண்ணா! பாத்திங்களா! கள்ளர் காளடி பள்ள, பள்ளமாக பதிஞ்சி இருக்குது.

**விமலசித்தம்**:—(விரைந்துவந்து பார்த்து) சண்டா, சந்தேக மென்பது இல்லவே இல்லே. இதுவே அவர்கள் காலடிகள். பலே பலே (தேகத்தை யசைத்துவிட்டு) நாமல்லவோ சுத்த வீரர். இனி கள்வரைக் கட்டாயம் கண்டுபிடிந்து விட லாம் தடையில்லே.

**குண்டன்** :—அண்ணா ஒரு சந்தேகம்

வீரபத்ரன் :—சீ, அவலட்சணமே, எப்போவு சந்தேக, சந்தேக இண்ணு சகுனக் கோழிபோலே கூவுறே யென்னடா! சந்தேக.

குண்டன் :—அண்ணு! கோபிக்காதிங்கோ, இது ஆம்பிள்ளேங்கோ காலடிதா இண்ணு கட்டாயம் எப்படிசொல்ல முடியு.

வீரபத்ரன் :—ஆ, பொம்மனாட்டிங்கோ காலோ?

குண்டன் :—ஏ சொல்லக்கூடாது நீங்க சொல்றது மாத்திர பொருத்தமோ?

வீரபத்ரன் :—அடே அறிவுகெட்டவனே! இந்த காட்டிலே நம்பபோலே ஆம்பிள்ளேங்கோ வற்றதே கஷ்டமாச்சே, பொம்மாட்டிங்கோ எப்படி வருவாங்கோ.

சண்டமூர்த்தி :—(கோபத்தோடு) அடே நா முன்னேயே சொல்லி இருக்கிறே பின்னே இப்படியே பண்ணிகினு வறே, (விரைந்து) அண்ணு! என்ன சொல்றே, கன்ன பிளக்க செய்றே.

விமலன் :—அடே சண்டமூர்த்தி, பொறு! பொறு!! நாய் குலேத்தால் நத்தம் பாழாகுமா? சிறுமதியுடையவன் நமக்குள் கலகம் வேண்டாம். வாருங்கள் வந்த விடயத்தைப் பூர்த்தி செய்வோம்.

(அனைவரும் போகிறார்கள்.)

---

## அங்கம் 5 காட்சி II.

இடம் :—சிறுக்காட்டுப் பிள்ளையார் கோவில்.

காலம் :—பிற்பகல்.

நடர் :—விமலமூர்த்தி, வீரபத்ரன், சண்டமூர்த்தி, குண்டன்.

[பிள்ளையார் சன்னிதியில், நிஷ்டையிலிருக்கும் அடியாரை வீரபத்ரன் காண்கிறான்.]

வீரபத்ரன் :—(தனிமையில்) அப்பா, ஆப்புட்டுகினுடா பையே அண்ணு! பள, பளபௗண்ணு மின்னுது.

சண்டமூர்த்தி :—என்னடா மின்னுது ?

வீரபத்ரன்:—கூவாதண்ணு (மேல் மூச்சுவாங்க) பள, பளண்ணு மிண்ணுது கள்ளே கண்டசர போட்டுகினு இருக்கிறு.

சண்டமூர்த்தி:—வீரபத்ரா! இரு! இரு!! நீபோவாதே. நீங்க ரண்டுபேரு இங்கேயே இருங்கோ. குண்டா! நீ இங்கே நில்லு. நான் உள்ளே போறே, வாங்கோ இண்ணு சத்தங் கேட்டா உடனே வந்திடுங்கோ தெரியுமா ?

[சண்டமூர்த்தி உள்ளே நுழைந்து அடியாரை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அனைவரையும் அழைக்கிறான்]

சண்டன்:—(சத்தமாக)அண்ணு வாங்கோ! வாங்கோ! (அனைவரும் உள்ளே நுழைந்து அடியாரைக்கட்டி வெளியே கொண்டுவந்து நிற்கவைத்து) அடே கள்ளா எங்காராஜா சொத்துக்களே கொள்ளை யடித்து வந்தது இல்லாமே பயமில்லாதே கண்ட சரத்தே கழுத்திலே போட்டுக்குனு இருக்குறே.

வீரபத்ரன் :—பாவம் கஷ்டப்பட்டு சம்பார்ச்சா இஷ்டம் போலே போட்டுக்குனு. அண்ணு! இவ பழய ஆசாமி யேமாந்தா கம்பிகாட்டுவா ஜாக்கிறதே.

சண்டமூர்த்தி :—அண்ணு! இவனுக்கு கெட்டகால, நம்புளுக்கு நல்லகால, இல்லாவிட்டா கண்டசாத்தே கழுத்திலே போட்டுக்குனு தூங்குவாணு. (அடியாரை நோக்கி) சன்னியாசி! பாத்துக்கோ குத்து நிஜம் சொல்லிடு (ஒரு குத்து முதுகின்மேல் குத்துகிறான்.)

திருவெண்காடர் :—அந்தோ சிவமே! சிவமே!!

சண்டமூர்த்தி —எடுத்துக்குனு எங்கடா பதிக்கி வைச்சே அத்தேசொல்லு அந்தெ செவமே இண்ணு ஆகுமா! உங்க அப்பே சம்பார்ச்ச சொத்தா.

திருவெண்காடர் :—ஐயா! ஏன்? என்னை இவ்விதம் தொந்தரவு செய்து அடிக்க முயல்கின்றீர். உங்களைப்போல் உண்டு, உடுத்தி ஓடிப்பாடித்திரிபவனல்லன். பிறந்த பயனை யடைய வருந்தியிருப்பவன். வீணுக வருத்துவது ஏதுக்கு.

சண்டமூர்த்தி :—பலே! பலே!! அண்ணு ஆசாமியே பாத்திங்களா! எல்லாரையும் சாப்பிட்டு ஏப்போ விடுவா. பாசாங்கு போட்டுகிறு ஒண்ணு அறியாத சன்னியாசியா உலக ஆசையே விட்டவணு, (அடிகளை நோக்கி) என்னடா! முழு பூசினிகாயே பிடிசோத்திலே மறைக்கிறே.

காவலர் :—

இந்துஸ்தான்—ஆதி.

தர்க்கம்.

ஆ·ஆ உன்மோசம் அறிந்துகொண்டோம்
அடைந்த இவ்வேஷமும் தெரிந்துகொண்டோம்
அதி தயிரியமுடன் அரசன் மனைபுகுந்து
ஆடினுய் களவே, நீடிய உளவே
ஆனது காட்டுதுன் முகத்தளவே (ஆ-ஆ)

திருவெண்காடர் :—

அநீதம் அநீதம் என்னையடிப்பதும் தானே
அறியேன் அறியேன் ஒருபாவமும் நானே

காவலர்:—

அழுதுபுலம்பினாலும் அணுவுநம்பவே மாட்டோம்
கழுத்திளிலொன்று, காணாது நன்று
களவது செய்தவன் நீ யென்று. (ஆ-ஆ)

திருவெண்காடர்:—

காமேந்தி இரந்துண்ணும் பரதேசியையா
களவது செய்தவன் நானல்லா மெய்யா.

சண்டமூர்த்தி:—நிஜம் சொல்றயா! அடிபடபோறையா?

[உண்மையைச் சொல்லென்று காவலர்கள் கருணை சிறிது மின்றி அடியாரை மறுபடியும் அடிக்கின்றனர்.]

திருவெண்காடர்:—

மால்கோஸ்—அடதாளம்.

தெய்வமே ஒளித்தாயோ என்னைத்
திருடனென்றே சொல்லி அடிக்கவுங் களித்தாயோ (தெய்)

சண்டமூர்த்தி:—அடடா, திருடனுக்குக் கூடாவா! தெய்வ ஹா-ஹா.

திருவெண்காடர்:—

செய்த தொன்றில்லையே சிவமே இதென்னவினை
மெய்வருந்துதே அந்தோ, செய்வகை யாதோ பினி (தெய்)

சண்டமூர்த்தி:—(கோபத்தோடு) அப்பா அண்ணு! பலே பக்கா நிஜவரவே இல்லேயே! சொத்துகழுத்திலே இருக்குது இல்லவே இல்லே இண்ணு சாதிக்குறுனே. அண்ணு அடியாத மாடு படியாது இதோ பாருங்கோ ஒரு நிமிஷத்திலே நிஜ சொல்லவைக்கிறே. (அடிக்கக் கையை ஓங்குகிருன்.)

திருவெண்காடர்:—சிவா! சிவா!! முன்செய்த வினேயோ

[விமலசித்தன் சிறிது அடியார் உண்மையை உணர்ந்து, யடிக்க வேண்டாமென்று தடுக்கிருன்.]

விமலசித்தன்:—அப்பா! அடிக்கவேண்டாம் பொறுங்கள், பொறுங்கள். இதிலென்னமோ சூது இருக்கின்றது. அது நமக்குத்தெரியவில்லே, அறியாமல் தலேயில், மாணிக்க முண்டென்று தலேயை வாங்கிவிட எத்தனித்தது போலாகும் அடாது, அடாது, நமது அரச சமுகத்திற் கழைத்துக் கொண்டுபோய் அவராக்ஞைப்படி யாவும் செய்வோம்.

சண்டமூர்த்தி:—அப்பா, கும்பிட்ட தெய்வ குறுக்கே வந்த தப்பா அம்மா ஒதையில்லாமே தப்பிச்சிகினே (பிடித்துத் தள்ளி) நட யெங்க ராஜா சமுகம்.

---

**அங்கம் 5.** **காட்சி III.**

இடம் :—பத்திரகிரி அரசர் கொலுமண்டபம்
காலம் :—காலை
நடர் :—பத்திரகிரி அரசர், மந்திரி, திருவெண்காடர், காவலர் முதலியோர்.

[பத்திரகிரி அரசர் சமுகம் திருவெண் காடர் அகப்பட்ட சேதியை ஒரு காவலன் வந்து தெரிவிக்கிறான்.

சண்டமூர்த்தி :—மண்டலேஸ்வரா ! காவலன் நமஸ்கரிக்கின்றேன்.

சுமதி :—காவலா ! என்ன விசேடம்.

சண்டமூர்த்தி :—சாமி நம்போ அரண்மனையிலே களவுசெய்த கள்ளே ஆப்ட்டாசாமி. உத்தரவாணு இராசசமுகோ கொண்டுவரரோ.

பத்திரகிரி :—அப்படியா ! எவ்விதம் அகப்பட்டான் விபரமாகச் சொல்.

சண்டமூர்த்தி :—சாமி ! ஒங்க ஒத்தாவு வந்த ஒடனே, பொறப்பட்டு காடெல்லா சுத்திபாத்திட்டு, சிறுக்காட்டுப் பிள்ளை யாரு கோவில் கிட்டே வந்தோ, எனக்கு சந்தேகவந்தது ஒடனே அந்தகோவுலுக்கு உள்ளேபோயி பாத்தே ஓர்தே சாமியாருவேஷம் போட்டுகுனு நம்போமாலே இருந்த துங்களே அத்தே கழுத்திலே போட்டுகுனு பொட்டம் போலே ஒள்ளே உக்காந்திகினு இருந்தா.

சுமதி :—என்ன கண்ட சரமா ?

சண்டமூர்த்தி :—ஆமா சாமி, கழுத்திலே போட்டுகினு வெறிலே தூங்கினே இருந்தா பிடிச்சி கொண்ணாந்திட்டோ.

பத்திரகிரி :—பேஷ் ! மெச்சத்தகுந்தது ! (காவலனைப் பார்த்து) உடனே சென்று அக் கள்வனை இங்கழைத்துவா.

சண்டமூர்த்தி :—சித்தப்படியே பிரபு.

[காவலர் திருவெண்காடரைக் கட்டிய கட்டுடன் இராஜசபையில்கொண்டு வந்து நிறுத்துகிறார்.]

பத்திரகிரி :—(அடியாரை யுற்றுநோக்கி) சுமதி! சிவவேடத்தைக் கொண்டவர், தவச்செயலை விட்டு அவச்செயலைச் செய்வாரோ? இது ஆச்சரியமாக வன்றோ? இருக்கின்றது.

சுமதி :— சக்ராதிபதி! தாங்கள் சொல்வது யாவும் உண்மையே. ஆனால் நமது அரண்மனையில் களவுபோன விலையுயர்ந்த கண்டசரம், கழுத்தில் பிரத்தியட்சமாகக் காணப்படுகிறது. இது ஒன்றே போதுமான அத்தாட்சி. தப்பித்துத் திரிவதற்கே கொண்ட பொய்வேடமே யன்றி, ஒப்பற்ற சிவவேடமன்று.

பத்திரகிரி :—(தலையசைத்துவிட்டு) ஏ சன்னியாசி! நீ களவு செய்தது, உண்மைதானே?

திருவெண்காடர் :—மன்னா சர்வ பரித்தியாகஞ் செய்து துறவறங்கொண்டவன் யான். கண்டசரத்தைப் பற்றியும் காஞ்சரத்தைப் பற்றியும் எனக்காக வேண்டுவதென்ன! யான் ஒன்று மறியேன்.

பத்திரகிரி :—நீ யொன்றும் அறியமாட்டாய். உன் கழுத்திலிருக்கும் கண்டசரம் எவ்விதம் வந்தது.

திருவெண்காடர் :—எவ்வித மென்றும் யானறியேன். எல்லாம் திருவருள் அறியும். சடத்தோடு சடமாய்ச் சரம்வந்து சேர்ந்தால், சத்தான எனக்கு அதில் என்ன சம்பந்தம்?

பத்திரகிரி :—(தலையசைத்துவிட்டு)மோசம். இருக்கட்டும். நீ அந்த சிறுக்காட்டுப் பிள்ளையார் கோவிலில் என்ன செய்து கொண்டிருந்தாய்?

திருவெண்காடர் :—செய்யும் செயலற்று உய்யும் வகைநாடியிருந்தேன்.

பத்திரகிரி :—என்ன! என்ன!! இன்னொருமுறை சொல்.

திருவெண்காடர் :—செய்யும் செயலற்று உய்யும் வகைநாடியிருந்தேன்.

பத்திரகிரி :—(கோபத்தோடு) சட் வாயை மூடு.

தந்யாசி—ஆதி.

பல்லவி.

நான் அணுவும் நம்பேன், ஓ. ஓ. நீ
தான் திருடனென்பேன் (நான்)

அநுபல்லவி.

காணமற் போனதுன் கழுத்திலிருக்க நேரே
கையு மெய்யுமாகக் கண்டுபிடித்தாரே (நான்)

சரணம்.

சாதனையாகவே சாதித்தாலும் தொல்லை
சட்டப்படிக்கே யுன்னை விட்டிட விதியில்லை
சோதனை செய்தவர் சொன்ன சாட்சியோடு
சொத்து முன்னிடமே இருப்பதுவுங்கொடு (நான்)

சுமதி, இக்கள்வன் சொன்னதை கவனித்திரா?

சுமதி :—பிரபு, கவனித்தேன். அரச சமுகமென்றும் சிறிதும் அச்சமின்றி தன் இச்சைபோல் உளறுகிறான். பிராணனைத் திரணமாகக் கொண்டவர்களே, இத்தகைய செயலைச் செய்யத் துணிவார்கள். இது இயற்கைதானே.

பத்திரகிரி :—ஆனால் இவனைத்தகுந்தபடி தண்டிக்கவேண்டும்.

சுமதி :—ஆம். ஆம். அப்படி தண்டிக்காவிட்டால் இக்கள்வனைச் சார்ந்தக் கூட்டத்தினர் மறுபடியும் நமது பட்டினத்திற் புகுந்து கொள்ளையடித்துப் பாழ்படுத்திவிடுவார்கள்.

பத்திரகிரி :—சுமதி! இவன் குற்றத்திற்கேற்ற தண்டனை விதிக்கச் சட்டமேதுவோ?

சுமதி :—மண்டலாதிபதி! இது இராஜத்துரோகத்தைச் சார்ந்தது, இதற்கு நான்கு பிரிவாக நான்குவித தண்டனை வகுத்து இருக்கின்றது. அதாவது, அறிந்து செய்ததென்றும், அறியாமற் செய்ததென்றும், செய்யவேண்டு மென்னும் பெரிய பிரயத்தினத்தோடு செய்ததென்றும். அவை யாவையெனில் ஒருவன் சிறியவயதில் கல்வியறிவில்லாது சிற்றறிவினால் இவ்வித குற்றஞ் செய்வானாகில். அது அறியாமை யாகும். அக்குற்றத்தை மன்னித்து நல்லறிவு வருமளவும் அவனை இராஜகாவலில் வைத்து பரிபாலிக்க வேண்டுமென்பது ஓர் பிரிவு. இது செய்தால் இதுவரும் என்று தெரிந்தும் ஏகனாக இருந்து செய்வானாகில் அது தெரிந்து செய்ததாகும். அக்குற்றத்திற்கு அவனை மரண பரியந்தம் சிறைச்சாலையில் வைக்க வேண்டுமென்றும் மற்றோர் பிரிவு. பெரிய பிரயத்தினத்தோடு தன்னுடன் சிலரைச் சேர்த்துக்கொண்டு இவ்விதகுற்றம் செய்தால், செய்யவேண்டுமென்று செய்த குற்றமாகும். இக்குற்றத்திற்குத் தலைவனாக இருப்பவனுக்கு மரணபரியந்தம் சிறைச்சாலையும், பற்றவர்களுக்கு 10 வருடம் கடுங்காவல் தண்டனையுமாக விதிக்கவேண்டுமென்று மூன்றாம் பிரிவு பெரிய கூட்டத்தைச்சார்ந்த ஒருவன் தகுந்த சொத்துக்களுடன் ஏகனாய் அகப்படுவானாகில், அவனுக்கு மரணதண்டனை விதிக்கவேண்டுமென்று நான்காவதாக வகுத்துள்ளது. அவ்விதம் செய்வித்தால் தான் ஓடிவிட்டகள்வர்களும் திகிலடைந்து மறுபடியும் இவ்விதச் செயலைச்செய்ய மனமிசையார்கள்.

பத்திரகிரி :—சட்டப்படி செய்வதே எனதிஷ்டம். அதுவன்றியும், குற்றவாளி சொல்வதெல்லாம் கபடவார்த்தைகளாக விருக்கின்றது. அதுவன்றியும், கள்வர்க்கேற்ற குணமும், சொத்துக்களும் அத்தாட்சி இருப்பதால் களவு செய்தவன் இவன்தான் என்று திட்டமாகத் தெரிகிறது.

[அரசன் ஒரு சீட்டெடுத்து குற்ற வாளிக்கு விதிக்கவேண்டிய தீர்மானத்தையெழுதிவைத்து விட்டு சிம்மாதனத்தை விட்டெழுந்து இரு கரங்களையுங் குவித்தவண்ணமாக, ஈஸ்வரத் தியானஞ் செய்கிறான். மற்றவர்களும், அப்படியே செய்கின்றார்கள்.]

விருத்தம்.

ஒருவனேபோற்றி ஒப்பி லப்பனேபோற்றி வானோர்
குருவனேபோற்றி யெங்கள் கோமளக்கொழுந்துபோற்றி
வருகவென்றென்னை நின்பால் வாங்கிடவேண்டும்போற்றி
தருகநின்பாதம்போற்றி தமியனேற்றனிமை தீர்த்தே

கருணாநிதி! சுமதி யெடுத்துக்காட்டிய சட்டத்தின்படியே உமது கட்டளை யென்றே இக்குற்றவாளிக்குத் தண்டனை விதிக்கின்றேன். (சுமதியை நோக்கி) சுமதி! சட்டத்திலேற்பட்டுள்ள நான்காம் பிரிவின்படி இக்குற்றவாளியை கழுமரத்தி லேற்றிவிடுங்கள்.

[அரசன் எழுந்து சரேலென்று அரண்மனைக்குப் போய்விடுகிறான். கொலைஞர் வந்து அடியாரைக் கட்டுடன் பிடித்துக் கொள்கிறார்கள.]

---

## அங்கம் 5. காட்சி IV.

இடம் :—கொலைக்களம்.

காலம் :—மாலை.

நடர் :—திருவெண்காடர், கொலைஞர்.

[திருவெண்காடரைக் கொலைஞர் பிடித்த பிடியுடன் கழுமரத் தண்டை கொண்டுவந்து நிறுத்துகிறார்கள்.]

கொலைஞர் தலைவன் :—ஐயா சன்னியாசி! யே, திருடினே? (அடியார் தலையிசைக்கிறார்) சும்மா தலையாட்டுரே இராஜா கிட்டோ வெட்டவெளிச்சமா பட்டோலே படிச்சாங்களே, அப்படி செய்யலாமா? பாத்தியா கழுமரத்தே, யாரூ உனக்கு இருக்கிறாங்களா அவங்களே பாக்க இஷ்டமா சொல்லு.

திருவெண்காடர் :—ஐயா! எனக்கு யார் இருக்கிறார்!

காபி—ரூபகம்.

பல்லவி.

எல்லா உயிர்க்கும் உயிராய் இலங்கும்
ஈசனிருக்கிறார்—ஜெகதீசனிருக்கிறார். (எல்)

அநுபல்லவி.

அல்லவுமில்லவுமாய் இருந்தாட்டும்
ஆனந்தத் தாண்டவனார் விளையாட்டு. (எல்)

சரணம்.

விள்ளற்கரிய விமலன் செயலிது
கள்ளனென்றென்னையுங் காட்டிக்கொடுத்தது
உள்ளமுமுயிரு முணர்ச்சியுங்கொண்டவர்
கொள்ளாமலென்னையும் தள்ளிவிடுவாரோ. (எல்)

அப்பா கொலைஞர் விதைத்தது வேம்பாய் இருந்தால் கரும்பு எப்படி விளையும்? அஞ்ஞானத்தால் மூடப் பட்ட ஜீவர்கள் உண்மையை அறிவார்களோ? சத்தா சத்தாகிய திருவருள் ஒன்றே, சாட்சியாய் இருந்து அறி கின்றது. ஆகவே அத்திருவருளைச் சற்று பிரார்த்திக்கக் கிருபை செய்யவேண்டும்.

கொலை:—அது ஞானமோ! கீனமோ! நல்லவனாய் இருக்குறே அப்படியே செய்.

திருவெண்காடர்:—அகண்ட பரிபூரண சச்சிதாநந்த சொரூ பமே! தமது பேரருளைப்பெற்ற சத்துக்களையும், பிராரத்வ கர்மம் விடாது பற்றுமென்றால் யான் எம்மாத்திரம். எம் பெருமானே! தமது திருவடிகளே கதியெனக் கொண் டேன். திருவருட் சம்மதம் எப்படியோ! அப்படியே ஆகட்டும்.

(இருகரங்களையும் குவித்தவண்ணமாக)

விருத்தம்.

என் செயலாவது யாதொன்றுமில்லை யினித் தெய்வமே
உன்செயலே யென் றுணரப் பெற்றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே.

[திகிலென்று கழுமரம் பற்றி யெரிகின்றது. கொலைஞர் பய ந்து விரைந்தோடி அரசர் முதலியோரை யழைத்து வரு கிறார்கள்]

பத்திரகிரி:—(விரைந்து நமஸ்கரித்தவண்ணமாக) அருள்வடிவே! அடியேன் அறிவின்மையால் செய்துவிட்ட குற்றத்தை மன்னித்துத் திருவடிக்கன்பனாகத் திருவருள் பாலிக்க வேண்டும், கிருபாநிதி.

திருவெண்காடர் :—மன்னா! யாம் உம்மேல் பிழை கூறோம். பிராரத்துவமென்று தேறுவோம். சத்துக்கும், அசத்துக்கும் வேறாய், சத்தாசத்தென் றொன்றுளது. விளைப்பதும், ஒழிப்பது மதுவே. அநித்தியவஸ்து உண்மையாக இருப்பதில்லை, நித்திய வஸ்து இன்மையாகப்போவதில்லை. இது ஒன்றே யாரும் உணரத்தக்கது.

பத்திரிகிரி :—(திடுக்கிட்டு) ஒப்பற்ற பரம்பொருளே ! உணர்ந்தேன் உணர்ந்தேன்.

[அரசன் அஞ்ஞான மொழிந்தவனாய், தனது திருமுடியையும், வாளாயுதத்தையும், அமைச்சனிடம் தந்துவிட்டு]

[சுட்டுவிரலைக் காட்டி] நீவிர் போவீர். வேறு அரசனை நியமித்துக்கொள்வீர் [அடிபார் திருப்பாதங்களில் வீழ்ந்து அஞ்சலியஸ்தனாய்]

பூரிகல்யாணி—அடதாளம்.

பல்லவி.

கிருபைசெய்தாளும் மெய்யா
குறைகளைந்திடுவீரையா
துரியங்கடந்த சோதி தூய்யமலர்ப்பதமே கதி

சரணம்.

திருவுளமிகவே கோக துன்பஞ்செய்திட்டேன்பாவி
பெருமையறியாப் பேதை பொறுப்பீர் கருணைமேவி
சரணந் துணைஒன்றே சற்குருமணியே இன்றே
ஒருமைபெறவே ஏன்றே ஓதுமெஞ்ஞானக் குன்றே

பத்திரகிரி:—(அடியார் திருப்பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து) ஐயனே! அடியேன் இப்பாசபந்தத்தினின்று விலகி உய்யும் வகையை தேவரீர் கிருபை வைத்து கடாட்சிக்கவேண்டும். மெய்போல் தோன்றி பெரிய பாவத்தை விளைவிக்கும் இப்பொய்வாழ்க்கையை இனி விரும்பேன். இது சத்தியம்.

திருவெண்காடர்:—மன்னா! ஒப்பற்ற ஞானமுதத்தைப் புசிக்கப் பிராப்தமுடைய ஜீவன் நாமரூபமாகிய உபாதிகவசத்தால் மூடப்பட்டு யதார்த்த சொரூபத்தை மறந்திருந்தவனாயினும் ஒரு காலத்தில் எத்திறத்தானும் சந்தர்ப்பம் நேரப்பெற்று மீண்டும் நல்லுணர்ச்சியடைந்து உயர்நிலையைப் பெறுவான் என்பது முமூட்சுக்கள் துணிபு. ஆகவே அவ்விதமே அனுக்கிரகமும் செய்தோப. இனி, திருவிடைமருதூர் திருச்சன்னிதி மேலைய கோபுரவாயிலைச் சார்ந்து உனது இஷ்ட பூர்த்தியைச் செய்துகொள்.

பத்திரகிரி:—தன்யனானேன். தயாநிதி! திருவுளப் பாங்கின்படியே செய்வேன் (நமஸ்கரித்தெழுந்து திருவிடைமருதூருக்குச் செல்கிறார்.)

அங்கம் 5. காட்சி V.

இடம் :—திருவிடைமருதூர் திருச்சன்னிதி.
காலம் :—நண்பகல்.
நடர் :—திருவெண்காடர், பத்திரகிரியார், (நாய்).

[திருவெண்காடர், விந்தம், கேதாரம். ஸ்ரீசைலம், திருக்குற்றாலம், இராமேஸ்வரம், வேதாரண்யம் முதலிய திவ்யக்ஷேத்திரங்கள் எல்லாம்சென்று திருவிடை மருதூர் திருச்சன்னிதியடைந்து கீழைக்கோபுரவாயிலில் வீற்றிருக்கிறார். பத்திரகிரி யரசனும் குருவாணையின்படி தன்னை யபய மென்றடைந்த பெட்டை நாயையும் வைத்துக்கொண்டு பசித்தால்யாசித்து உண்பதுமாய் மேலைக் கோபுர வாயிலில் சிவ சிந்தனையோடு வீற்றிருக்கின்றார். திருவருள் இவர்களைச் சோதிக்கத் திருவுளங்கொண்டு ஜங்கம சொரூபியாய் வருகிறார்.]

ஆண்டான் :—ஐயா! பெரியவரே! பசி அதிகரிக்கின்றது. ஓர் பிடியன்ன மளிக்கவல்லீரா?

திருவெண்காடர் :—(நகைத்துவிட்டு) ஐயா! அடியேன் கோவணமே பாரமென்று உள்ளேன். தேவரீர் பசிக்கு அன்னமிடப் பாத்திரனோ? ஆனல் உமது பசியைத் தணிக்கத் தகுந்தவன் மேலைக் கோபுரவாயிலில் ஒரு சமுசாரியுள்ளான். அவன்பாற் செல்லும்.

ஆண்டான் :—சந்தோஷம், அப்படியே செல்வோம்.

[தலையசைத்த வண்ணமாக பத்திரகிரியார் சமுகம் வந்து]

ஐயா ! பசி அதிகரிக்கின்றது. என்னால் பொறுக்க முடிய வில்லை. கீழைக்கோபுரவாயிலில் இருக்கும் ஒருவரை, பசிக்குச் சோறிடுமெனக் கேட்டேன். அவர் கோவணமே பாரமாகப் போக்கிடமின்றி இருப்பதாகவும், மேலைக்கோபுர வாயிலில் ஒரு சமுசாரி யுள்ளார் அவரிடம் போனால் பசியாறு மென்றும், சொன்னார். ஆகவே நீரேனும் என்பசி யாற்ற வல்லீரோ ?

பத்திரகிரியார்:—(தலையசைத்துவிட்டு) அப்படியா ? இரந்துண்ணும் ஓடும், எச்சலுண்ணும் நாயுமோ ? அறமளிக்கும் சமுசாரியாக்கின ! (தனிமையில்) சீ, இனி கூடாது ! கூடாது ! (ஓட்டையோங்கி அடிக்கிறார்)

[அது தன்னிடமிருந்த பெட்டை நாய் தலையிற்பட்டுடைந்து நாய் உயிர் துறக்கின்றது. சோதிக்க வந்த சோதியும் மறைகின்றது. பிராணனிழந்த நாய், காசிமாநகரத்து விஸ்வகுத்த னென்பவனுக்கு மகளாகப் பிறந்து, ஞானவல்லி யென்ற பெயருடன் வர்த்தித்து வருகின்றது].

## அங்கம் 5. காட்சி VI.

இடம் :—திருவிடைமருதூர் சன்னிதி
காலம் :—பிற்பகல்
நடர் :—பத்திரகிரியார், ஞானவல்லி

[பத்திரகிரியார் சிவயோக சமாதியில் இருக்கிறார். ஞானவல்லி தன்னுடன் வந்த தந்தை முதலியோரை சன்னிதானத்துப் பின்புறம் நிற்கச்செய்து தனியே சற்குரு சமூகம் வந்து கைகுவித்த வண்ணமாக நிற்கின்றாள்.]

பத்திரகிரியார்:—(கண்விழித்துப் பார்த்து) கன்னியே நீ யார்? யாது காரணம்பற்றித் தனியேபோந்தனை.

ஞானவல்லி:—(நமஸ்காரத்தோடு) குருமூர்த்தி! யான் தனியே போந்ததன்று. என்னுடன் வந்த தந்தை முதலியோர் சன்னிதி பின்புறத்துள்ளார்கள். நாயடியாளாகிய யான் மீண்டும் தமது திருவடிப்பேற்றிற்கே ஆளாகவேண்டி உளங்கொண்டிங் குற்றனன்.

பத்திரகிரி:—(ஆச்சரியத்துடன் உற்றுநோக்கி தனிமையில்) எச்சிலுண்டிருந்து இறந்துபோன நாயா இத்தகைய உச்சித வடிவைப்பெற்றது. (தலையசைத்துவிட்டு) எல்லாம் குருநாதன் அறிவார்.

ஞானவல்லி:—பெருமானே! "புணர்ந்த பாவமெல்லாம் பரிபூரணம் உணர்ந்த ஞானி விழிபட ஓடுமே" என்ற ஆப்த வாசகப்படி ஞானிகள் விழிநோக்கம் ஒன்றே, பிறவித் துன்பத்தை யொழிக்கு மென்றால் உத்தமஞான சொரூபராகிய தமது உச்சேடத்தை யுண்டிறந்த யான் இத்தகைய சொரூபத்தைப் பெற்றது ஆச்சரியமோ?

பத்திரகிரி:—(தலையசைத்துவிட்டு) கன்னியே, வா. நாம் கீழைக் கோபுரவாயிலில் இருக்கும் குருநாதரை சேவிக்கலாம்.

[பத்திரகிரியார் ஞானவல்லியுடன் திருவெண்காடரை நமஸ்கரித்து நின்று.]

பத்திரகிரி:—என்னைத் தடுத்தாட்கொண்ட தயாபரா! எச்சிலுண்டிறந்த நாய்க்கு இப்பிறவிநோய் வரலாமோ?

[எல்லாமுணர்ந்து ஞானசொரூபராகிய அடியார் புன்னகையோடு.]

திருவெண்காடர்:—அன்ப! இறைவன் செயலுக்கு என் செய்ய வல்லோம். ஆக்குவதும், அளிப்பதும், அழிப்பதும் அவனே. அவனன்றி ஓரணுவு மசையாதென்பது அறியாயோ? எல்லாம் ஈசன் செயல்.

[ஞானவல்லி அஞ்சலிசித்தளாய் அடியார் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து திருவருட் சிந்தனையாய் நிற்கிறாள்]

## விருத்தம்.

ஈசனே யென்னம்மானே யெந்தை பெருமா னென்பிறவி
நாசனே யான்யாது மொன்றில்லாப் பொல்லா நாயான
நீசனே னையாண்டாய்க்கு நினைக்கமாட்டேன் கண்டாயே
நேசனே யம்பலவனே செய்வதொன்று மறியேனே.

[திடீரென்று ஒரு சோதி தோன்றுகிறது. பத்திரகிரியாரும் நாயடிகளும் தாதான் மயம் பெறுகின்றார். இதுகண்டவடியார் திடுக்கிட்டு சிவசிவாவென்று மரம்போல் சாய்ந்து மண்ணில் விழுந்து புரண்டு திருவருளைச் சிந்தித்தும் நிந்தித்தவராய் புலம்புகிறார்.]

திருவெண்காடர்:—(தரையிற் புரண்டெழுந்து நின்று)

நீலாம்புரி—சாப்பு.

கண்ணிகள்.

வஞ்சமி தல்லவோ ஐயா—உன்றன்
நெஞ்சங்கல் லானதோ மெய்யா

கொஞ்சமிரங்க மனமில்லையா—என்றும்
கெஞ்சும் அடிமை செய்கை பொய்யா

நாயினும் கடையேனே எந்தாய்—பெற்ற
தாயினும் சிறந்த தந்தாய்,

தேவர் மூவர் யாவருக்கும் அறிவரிதாகிய சிவபெருமானார் அன்பர்கள் அன்புக்கெளியவனாகி யிருக்கின்றார் என்பது இன்று பிரத்தியட்சமாகக் கண்டேன். ஆனால் தாங்கள் என்பாற் செய்தது வஞ்சகமன்றோ? வரகுணபாண்டியன் மனைவியைத் திருவடியிற் கலந்துகொண்ட கருணையாளா! உமது சரணமேகதி யென்று இருக்குமென்னை இவ்விதம் செய்யலாமா! நாயினும் கடைபட்டவனோ? அந்தோ பட்ட துன்பமெல்லாம் போதாது, இன்னுமென்ன துன்பத்தைக் கொடுக்க எண்ணமுற்று இருக்கின்றனையோ? தாயிற் சிறந்த தயாபரா! சர்வ பரித்தியாகஞ்செய்து சத்தாகிய உமது சேவடிக்கே அல்லும், பகலும், என் சித்தம் உருகின்றதே! முத்தர் பெருமானே! முழுமுதற் கடவுளே! எத்திறம் பெற்று உய்வேனோ? அறியேன், அறியேன். அந்தோ சிவமே, சிவமே! (மண்ணில் விழுகிறார்.)

[சிவபெருமான் அசரீரியாக.]

அன்ப! பட்டினத்துப்பிள்ளாய், நமது ஒற்றியூருக்கு வருதி. உனதிஷ்டபூர்த்தியாகும்.

[அடிகள் திடுக்கிட்டெழுந்து திருவருட் சிந்தனையாய்]

திருவெண்காடர்:—எம்பெருமானே! இன்றே இதங்கொண்டேன். தாங்களனுக்கிரஹித்தவண்ணமே திருவொற்றியூருக்குச் செல்வேன். (விரைந்து செல்கிறார்.)

## அங்கம் 5. காட்சி VII.

இடம்:—திருவொற்றியூர் கடற்கரை

காலம் —மாலை

நடர்:—திருவெண்காடர், இரங்கநாதன், அனந்தநாதன், கோவிந்தன், கோபாலன், இரகுநாத , நாராயணன்.

[அடியார் கைகுவித்த வண்ணமாக ஆனந்தக் கண்ணீர்பெருக,]

திருவெண்காடர்:—திருவொற்றியூருடைய சிவபெருமானே! தேவரீர் கடாக்ஷித்த வண்ணமே இங்குற்றேன், கிருபா சமுத்ரா! இனி பிறவித்துன்பம் அணுகாதிருக்கத் தமது பேரருளே திறமாகக் கொண்டுய்யும் அடியேன் ஓர் விண்ணப்பம்.

கட்டளைக் கலித்துறை

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து
மெய்யும்பொய் யாகி விழுகின்ற போதொன்று வேண்டுவல்யான்
செய்யுந்திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத்தும் கற்பியுமே.

[தியானகோலமாய் இருக்குந் தருணம், மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த இரங்கன், ஆனந்தன், கோவிந்தன், கோபாலன், இரகுநாதன், நாராயணன் முதலியவர்கள் அடியார் சமுக மணுகி உற்று நோக்கி,]

இரங்கன்.—சாமி உக்காந்திக்குனு என்ன பண்றிங்கோ ?

திருவெண்காடர் :—சிறுவர்களே ! யான் பண்ணுகிறது ஒன்றே. அது உங்களுக்குச் சொன்னால் விளங்காது.

இரங்கன்:—சும்மா சொல்லுங்கோ சாமி இண்ணு.

திருவெண்காடர்:—இது தேகவிளையாட்டு

இரங்கன்:—அதென்ன தேகவிளையாட்டு சாமி? கொஞ்ச விளையாடி காட்டுங்கிளே?

திருவெண்காடர்:—அப்படியே காட்டுகிறேன். நீங்கள் என் சொற்படி கேட்பீர்களா?

இரங்கன்:—அம்மம்மா நீங்கோ எப்படி சொல்றிங்கிளோ அப்படியே கேப்போ.

திருவெண்காடர்:—சிறுவர்களே! யான் சொல்வதை நன்றாகக் கவனியுங்கள். இதோ இருக்கின்றதே, இந்த நீர்ச்சாலால் என் தேகத்தை மூடிவிட்டு சில நிமிடம் தாமதித்துத் திறந்துபாருங்கள். அப்போது உங்களுக்கு அந்த விளையாட்டு இன்னதென்று நன்கு விளங்கும்.

[கோகுல உத்தமச்சிறுவர்கள் மிகுந்த சந்தோஷத்துடன் குறிப்பிட்ட சாலால் அடியார் திருமேனியை மூடிவிட்டு, சற்றுப் பொறுத்துத் திறந்து பார்க்கின்றனர். அடியார் காணாது வேறோரிடத்திலிருந்து வருவது கண்டு ஆச்சரியங் கொண்டு.]

இரங்கன்:—சாமி! சாமி!! இன்னொரு தடவை உட்காருங்கோ பாக்கலாம்.

(மறுபடியும் அப்படியே செய்கிறார்)

கோபாலன்:—அடே ரங்கா இதிலே சூது இருக்குதுடா, இந்த வாட்டிகண்டு பிடிச்சிறேடா.

இரங்கன்:—சாமி! இன்னொர்தாட்டி உக்காரு சாமி. கோபாலே என்னமோ கண்டுபிடிக்க போறானு என்னுங்கோ சாமி.!

திருவெண்காடர்:—அப்படியா! சற்றுப் பொறுத்து செய்யுங்கள்.

## விருத்தம்.

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சிவாய புறமெனும் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி.

திருவெண்காடர்:—சிறுவர்களே, இப்போது உங்களிஷ்டப்படி செய்துகொள்ளுங்கள்.

[அடியார் சிவயோக சமாதி கூடவும் சிறுவர்கள் முன்போலவே அடியார் திருமேனியை மூடி மறைந்துவிட்டு சற்றுப் பொறுத்துத் திறந்து பார்த்து ஒப்பற்ற சிவலிங்கசொரூப மிருப்பது கண்டு ஆச்சரியமுற்று,]

0-2MK58,9
N19

இரங்கநாதன்:—அடே. கோபாலா! அந்தசாமி காணோ இந்த சாமி இருக்குதே! வாடா வாடா. அல்லாருக்கு போய் சொல்லலா.

[அனைவரும் விரைந்தோடி ஊரி லுள்ளவர்களை அழைத்து வருகிறார்கள். தெளிந்த அன்பர்கள் சிவலிங்க சொரூபத்தைக் கண்டு ஆனந்த பரவசராய் சோடசோபசாரஙகளோடு அபிடேக முதலியவைகள் செய்து ஆனந்தங் கொண்டாடுகின்றார்கள்.]

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் ★ சென்னை-600 008. ★
148069

சுபம்! சுபம் !! சுபம் !!!

908
4-8